விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 06 புதன்கிழமை (20.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 152

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சந்தேகநபரை தப்பிக்கவிட்டாரா? பிரபல சட்டத்தரணி மீது பாய்ச்சல்

## படையினர் குவிப்பு; மக்கள் கிளர்ச்சி; புங்குடுதீவில் தொடரும் பதற்றம்



முற்றுகைக்குள் சட்டத்தரணி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் விததியாவின் கொலைச் சந்தேக நபர் ஒருவரை தப்பிக்கவிட்டார் எனத் தெரிவித்து பிரபல சட்டத்தரணி வி.ரி. தமிழ்மாறன் பொதுமக்களால் சுமார் நான்கு மணி நேரமாக கொளுத்தும் வெயிலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒருமணி தொடக்கம் 6.00 மணி வரை புங்குடுதீவு பெருங்காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, புங்குடுதீவில் மாணவியின படுகொலைச 23ஆம் பக்கம் பார்க்க....

# கொல்லப்பட்ட மாணவிக்கு நீதி கோரி போராட்டங்கள் தீவிரம்

## யாழ்.நகர் நேற்று ஸ்தம்பிப்பு; முடங்கியது பொலிஸ்



மேலும் படங்கள் உள்ளே...

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் உயர்தர வகுப்பு பாடசாலை மாணவியொருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்தும் குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனை வழங்கக் கோரியும் பாடசாலை மாணவர்களாலும் இளைஞர்களாலும் வடக்கு முழுவதிலும் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் வடக்கு எங்கும் போராட்டங்களும் பேரணிகளுமாக மக்களின் உணர்வு எழுச்சிகள் கிளர்ந்தெழுந்துள்ளன. (24ஆம் பக்கம் பார்க்க)

## வேலணைத்துறையில் களேபரம் வீதிகள் எங்கும் தீச்சுவாலை

(வேலணை)

புங்குடுதீவில் இருந்து பிரபல சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்ட நிலையில் வேலணைத் துறையில் திரண்ட பெருமளவான இளைஞர்களினால் தடுக்கப்பட்டார்.

வீதிகள் எங்கும் ரயர்கள் போடப்பட்டு வாகனத் தொடரணி தடுக்கப்பட்டது.

சட்டத்தரணி தங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என போராட்டக்காரர்களால் கோரப்பட்டது. இதனால் 23ஆம் பக்கம் பார்க்க....

## போரின் பாதிப்புக்களை ஆற்ற உரிய நடவடிக்கைகள் இல்லை

### ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் போர் முடிவுக்கு வந்த பின்னர் பாரிய கட்டிடங்களும வீதிகளும் அமைக்கப்பட்டிருந்தனவே ஒழிய போரினால் பாதிக்கப்பட்ட உள்ளங்களை ஆற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிததுள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கு எங்கும் இன்று போராட்டங்கள் முனைப்பு

## அனைத்து பாடசாலைகளிலும் ஒரு மணி நேர கவனயீர்ப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையிட்டு வடக்கில் பெரும் ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள், பகிஷ்கரிப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன்.

இவற்றின் காரணமாக வடக்கு பகுதியில் அமைதியின்மை தோற்றம் பெற்றுள்ளது. பொது இடங்களில இராணுவத்தினரும் பொலிஸாரும் [illegible] நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்று புதன் கிழமையும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய போராட்டத்துக்கு தமிழ் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இதேபோன்று வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகள் அனைத்தும் இன்று ஒரு மணி நேர புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளன.

அத்துடன், புங்குடுதீவு மகா வித்தியாலய பாடசாலை மாணவி விததியாவின் 23ஆம் பக்கம் பார்க்க....

## மற்றொருவர் கொழும்பில் கைது

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மாணவியின் படுகொலை தொடர்பில் மற்றொரு சந்தேகநபர் சுவிஸுக்கு செல்ல முறபட்ட நிலை 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



நேற்று மக்கள், சட்டத்தரணிக்கு எதிராக புங்குடுதீவில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போதான புகைப் படத்தொகுப்பு...

# மாணவி வித்தியாவின் கொலை கோரமான பாவச்செயல்

## வட மாகாண அதிபர்கள் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மாணவி வித்தியாவின் மரணம் ஆற்றொணாச் சோகமும் மாற்றவொண்ணா வடுவும் கொடுத்த கொடூரச் செயலாகும் என வட மாகாண அதிபர்கள் சங்கம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வித்தியா கூட்டுப் பாலியல் பலாத்காரம் தோய்ந்து படுகொலை செய்யப்பட்டமையானது பிள்ளைகளைப் பெற்றோர், பாடசாலைக் கல்விச் சமூகங்கள் உள்ளிட்ட மக்கள் சமூகத்தினை அதிர்ச்சிக்குள்ளாக்கிய கோரமான பாவச் செயலாகும்.

வலுமிக்க எமது கலாசார முதுசொம்ங்கள் காலத்தின் சோகச் சக்கரத்தில் தாழ்ந்து தசித்து வலுக்குன்றி நிற்கின்ற இவ்வேளையிலேயே எமது சமூக கட்டுமானத்தையும் அதன் பாதுகாப்பினையும் அடியோடு தகர்த்து விடுகின்ற இக்கொடூரத்தை எவ்வகையிலும் மன்னித்தலாகாது.

நல்லவற்றிற்கு துணை நிற்கும் எமது சமூகப்பண்பு மீண்டும் உயிர்ப்பிக்கப் படல் வேண்டும். இக் கொடூரச் செயலானது பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் இன்று எதிர்நோக்கியுள்ள ஆபத்தான சவால்களுக்கான சான்றாகும்.

வாழ்வாதாரங்களையும் தன்னம்பிக்கைகளையும் இழந்து துன்பத்தில் தோய்ந்து நிற்கின்ற எமது சமூகம் மீண்டெழத்துடித்து நிற்கின்ற இவ்வேளையில் தாய்மை, பெண்மை, பிள்ளை அன்பு, சகோதரத்துவம், சமூகப்பொறுப புணர்வு என்பவற்றையெல்லாம் காலால் மிதித்து இப்படுபாதக செயல்புரியப்புட்டிருக்கின்றது.

ஒன்றும் அறியாத அப்பாவி மாணவிக்கு இப்படுபாதகம் நடத்தப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் எமது சமூகத்திற்கும் மாற்ற வெண்ணா வடுவினை ஏற்படுத்தியுள்ளனர். அதனை வடமாகாண அதிபர்கள்சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இத்தகைய கொடூரமானவர்களை சட்டத்தின் மூலம் கடுமையான தண்டனைக்குள்ளாக்குதல் வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றது. மேலும் எமது இளம் சந்ததியினர் கலாசாரம் காக்கும் தவிர்க்க வொண்ணாத பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் அவாவுவந்து வேண்டுகின்றது என்றுள்ளது. (எ)


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



**பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத தாதியர்கள் தேவை**

வெள்ளவத்தையில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு வீடுகளிற்குச் சென்று நோயாளிகளை பராமரிப்பதற்கு இரக்க சிந்தனையுடைய 50 வயதிற்குட்பட்ட பெண்கள் தேவை.

தங்குமிடம், உணவு, மருத்துவவசதி இலவசம். EPF,ETF செலுத்தப்படும், சம்பளம் மாதம் 25000/= ற்கு மேல் (499)

மேலதிக விபரங்களுக்கு :- 0775561234 0714405303


# மரண அறிவித்தல்

## இராசலிங்கம் சாந்தரூபன்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் சாந்தரூபன் கடந்த (14.05.2015) வியாழக்கிழமை சுவிஸ்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் மணிமேகலை தம்பதியினரின் அன்பு மகனும், தில்லைநாதன் (ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா ரெலிகொம் - ஊழியர்) சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்பு மருமகனும், மேகலையின் (யசோ) அன்புக் கணவரும், கனுஜா, கனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமிர்தவல்லி, இராஜேஸ்வரி, காந்தரூபன் (லண்டன்), சுரேந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் சுரேஸ், சசிகலா, ரதிகா, கிரிதரன் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிரங்கநாதன், சண்முகநாதன், சர்வேஸ்வரி (லண்டன்), சோபா (லண்டன்), ரஜி, தீபா, தங்கவடிவேல், நவீந்திரன், கமலாதேவி, சதீஸ்குமார் (ஜேர்மனி), கௌசலா (கௌரி-லண்டன்), சுரேஸ்குமார் (ஸ்ரீலங்கா ரெலிகொம்-யாழ்ப்பாணம்), சஞ்சீவ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், செல்வலதா (ஜேர்மனி), ஜெயராசா (லண்டன்), சிவதர்சினி (ஸ்ரீலங்கா ரெலிகொம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2015) புதன்கிழமை சுவிஸ்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மனைவி,
பிள்ளைகள் (சுவிஸ்)
0041326216582

தில்லைநாதன் குடும்பத்தினர்
021 222 3168
981/ 12A, சுவாமியார் வீதி,
வளன்புரம், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(527)

# 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் ர.கீர்த்தனன்



திரு.திருமதி ரவிசங்கர்-நிறோஜா தம்பதிகளின் செல்வப் புதல்வன் 20.05.2015 இன்று தனது முதலாவது பிறந்த தின விழாவை அவரது இல்லத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடுகின்றார். இவர் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.

20, யமுனா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன்
வாழ்த்தும் சித்தப்பா,
கதிர்ச்செல்வன் (கதிர்)லண்டன்

(524)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 24 - 02 - 1944



இறப்பு 19 - 05 - 2015

எமது நிறுவனத்தின் முகாமையாளர் திரு.நடராஜா துஷ்யந்தன் அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் இளையதம்பி நடராஜா

அவர்களின் மறைவை இட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-1012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் தலைதூக்க நான் இடமளிக்கமாட்டேன்!

## ஜனாதிபதி மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாதம் மீண்டும் தலைத்தூக்கு வதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். போருக்கு பின்னரான காலத்தில் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் ப்ௌதீக வளங்களை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.**



மாத்தறையில் நடைபெற்ற ஆறாவது வெற்றி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்கு பின்னரான காலத்தில நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

பௌதீக வளங்களை கட்டியெழுப்புவதற்கு மாத்திரமே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அர்ப்பணித்து உழைத்த அரச தலைவர்கள் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தங்களை அர்ப்பணித்த, உயிர்த்தியாகம் செய்த முப்படையினர்களுக்கும், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு சேவைக்கும் நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி கூறினார்.

மக்களின் அச்சம், சந்தேகங்களை நீக்கிவிட்டு திறமையாக மற்றும் சாதாரணமாக செயற்படுமாறும ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் நாட் டில் நல்லிணக்கம் மற்றும் அபி விருத்தி ஆகிய இரண்டும் இணை ந்து முன்னெடுக்கப் படல் வேண்டும்.

தேசிய பாதுகாப்புக்காக முன்னெடுக்கவேண்டிய சகல நடவடிககைகளையும் மேற்கொள்வ தாகவும, புதிய தேசிய பாதுகாப்பு திட்டமும் முன்னெடுத்து வருவதாக வும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை மீண்டும் தலைதூக்குவதற்கு இடமளிக்க மாட் டேன். பாதுகாப்பு படைகளின் மனித வளங்கள் மேம்படுத்தப்படும் என்பதுடன் பௌதீக வளங்களும் பெற்று கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய அனைத்தையும் பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும ஜனாதிபதி தெரிவித்தார்.

இன்றைய தினம் நாட்டில் மற்றுமொரு அத்தியாயத்துக்கான பக்கம் ஆரம்பிக்கப்படுகின்றதெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# படுகொலை செய்யப்பட்ட வித்தியாவிற்கு ஆதரவாக இலவசமாக ஆஜராக சட்டத்தரணிகள் முன்வருகை

படுகொலை செய்யப்பட்ட வித்தியாவிற்கு ஆதரவாக இலவசமாக ஆஜராக பல சட்டத்தரணிகள் முன் வந்துள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தீவக அமைப்பாளருமான விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவைச் சேர்ந்த பாடசாலை மாணவியான செல்வி சிவலோகநாதன் வித்தியா எட்டுப் பேர் கொண்ட குழுவினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கோரமாக கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக யாழ்.தீவுப் பகுதியில் பெரும் பதற்றமும் அச்ச நிலையும் நிலவி வரும் நிலையில் யாழ்.குடாநாட்டிலும் வடக்கு மாகாணத்திலும் பொது அமைப்புகள், வர்த்தக சமூகங்கள், பாடசாலை சமூகங்கள், ஆசிரியர் சமூகம், பல்கலைக்கழக சமூகம் என பல அமைப்புகள் வித்தியாவுக்கு ஆதரவாகவும் வித்தியாவின் படுகொலையை கண்டித்தும் குரலெழுப்பி குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வடக்கு மாகாணத்தில் பாலியல் வன்முறை மற்றும் கொலைகளுக்கு எதிரான கண்டன கோசத்தோடு பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல சட்டத்தரணிகள் பலரும் அவர்களோடு ஓய்வுபெற்ற நீதிபதிகளாக இருந்த பல சட்டத்தரணிகளும் வித்தியாவுக்கு ஆதரவாகவும் கொலையாளிகளுக்கு கடுந் தண்டனை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தோடும் மன்றில் இலவசமாக ஆஜராக முன்வந்திருப்பது பாதிக்கப்பட்டவர்களுக்கும் வித்தியாவின் கொலைக்கு நீதி வேண்டி நிற்பவர்களுககும் பெரும் ஆறுதலாக அமைநதுள்ளது. சில சட்டத்தரணிகள் என்னிடம் முன்வந்து இத்தகவலை தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சரோடும் தீவகத்தில் எழுந்துள்ள பாதுகாப்பற்ற நிலை தொடர்பாகவும் குறிப்பாக தீவகத்திலே இத்தகைய செயல்கள் அடிக்கடி இடம்பெறுவதையும் சுட்டிக்காட்டி முதலமைசசர் வடக்கு மாகாண பொலிஸ்துறை சார்ந்தவர்களுடனும் இச்செயல்கள தொடர்பாக உரையாடி இருப்பதோடு இத்தகைய கொடூர செயல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை யும் எடுக்கக் கோரியுள்ள நிலையில் இன்றைய தினம் வித்தியாவின் இல்லத்திற்கு சென்ற நான் இவ்விடயங்களை அவர்களுக்கு தெரிவித்ததோடு இலவசமாக சட்ட த்தரணிகள் ஆஜராக முனவந்திருக்கும் விடயத்தை தெரிவித்து அவர் களுடைய ஒப்புதலையும் ஆதர வையும் பெற்றுள்ளேன்.

வித்தியாவின் குடும்பத்தினரும் ஊர் மக்களும் என்னிடம் குறிப்பிட்டபோது கொலையோடு சம்பந்தப்பட்ட எட்டுபேரும் தங்கள் உறவினர்கள் இல்லை என்றும் அவர்களுக்கும் தங்களுக்குமிடையே எவ்வித தனிப்பட்ட கோபங்களும் விரோதங்களும் இருந்ததில்லை என்றும் கைது செய்யப்பட்டுள்ள எட்டுப்பேரில் மூவர் புங்குடுதீவு வல்லனை சேர்ந்தவர்கள் என்றும் ஐவர் புங்குடுதீவு வீராமலையை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் சிலர் புங்குடுதீவை பூர்வீகமாகக் கொண்டவர்களும் பின்பு கிளிநொச்சியில் வசித்து இறுதிக்காலத்தில் புங்குடுதீவில் வசித்து வந்த மாங்காய் மணியம் என்பவரை பத்தாயிரம் ரூபாவிற்கு கொலை செய்தவர்கள் என்றும் இவர்களில் பலபேர் ஊருக்குள் பல சட்டவிரோத, சமூகவிரோத செயல்களில் ஈடுபட்டு வருபவர்கள் என்றும் இவர்களுக்கு கடும் தண்டனையை பெற்றுக்கொடுக்க வேணடும் என்றும் வித்தியாவின் தாயாரான சிவலோகநாதன் சரஸ்வதி, சகோதரி நிஷாந்தினி, சகோதரன் நிஷாந்தன் ஆகியோர் என்னிடம் தெரிவித்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அலஸுக்கு எதிராக அரசியல் வேட்டை

எந்தவொரு சட்ட அடிப்படையும் அற்ற நிலையில் தன்னை கைது செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதனை தடுக்க இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸினால், உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுவில், பொலிஸ் மா அதிபர், பொலிஸ் நிதி மோசடிப் பிரிவின் பணிப்பாளரான பொலிஸ் அத்தியட்சகர் மெவன் சில்வா, அப்பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ ஊடகப் பேச்சாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதிக்கு நெருக்கமான தனக்கு எதிராக அரசியல் வேட்டையொன்று முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் ஆலோசனைக்கமைய தன்னை கைது செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# இராசி பலன்

20.05.2015

(வைகாசி 06, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு

துதியை முற்பகல் 8.12 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 10.44 மணிவரை

இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

ஏகத்துவத்தினம் கல்கி பகவான்

வளவன்

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்:** வியாபார விருத்தியுண்டு, தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, வியாபார நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**துலாம்:** பொருளாதார நிலை உயரும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஏட்டி க்குப் போட்டியாக செய்றபட்ட வர்கள் மனம் மாறுவர், செ தொழில் மேன்மையுண்டு, வருமா னம் திருப்திதரும்.

**மகரம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு உடல்நலம் சீராகும், சேமிப்பை அதிக ரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம்பெறலாம், வெற்றிச் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு பிள்ளைகளின் நலனில் அதிக அக் கறை காட்டுவீர்கள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் கணி மான ஆதாயம் கிடைக்கும், சந்தி தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்பு இட பெறலாம், தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சி தரும், செ தொழில் மேன்மையுண்டு, சுபகாரிய பேச்சுக்கள் சுமுகமாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 202

## பொறாமையிலிருந்து விடுதலை!

...இடையூறற்ற அமைதியைப் பெறுவது எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். மற்றவர்களுடன் ஓடும் பொழுது உங்களுக்கு ஒரு குறுகிய கால அமைதி, ஒவ்வொரு ஆசை நிறைவேறும் பொழுதும் கிடைக்கலாம். அதுவும் அடுத்த ஒப்பிடுதலை ஆரம்பித்தவுடன் மறைந்துவிடும்.

இன்னொரு பக்கம் நீங்கள் உங்களுடன் மட்டுமே ஓடும்பொழுது விரைவான முன்னேற் றமும் இடையூரற்ற அமைதியையும் பெறுவீர்கள்.

மற்றவர்களால் இடையூறு செய்யப்பட்ட முடியாத அமைதி, மிகப் பெரிய விடுதலையாகும். தெளிவாக இருங்கள்... இன் னொருவரால் இடையூறு ஏற்படுவதாக நீங்கள் கொள்ளுதலில் குறை இருக்கிறதென்று அர்த்தம். அதாவது, நீங்கள் உங்கள் அமைதிக்கு இன்னும் மற்றவர்களைச் சார்ந்து இருக்கிறீர்கள் என்று பொருள்.

உங்கள் சொந்த பலவீனத்திற்கு உங்கள் தெளிவுக் குறைவிற்கு நீங்கள் சமூகம் என்று பெயர் கொடுக்கிறீர்கள். சமூகம் என்று ஒன்றுமில்லை. வானமே எல்லை, வானம் என்ற ஒன்றே இல்லை! விரிதலே வாழ்வு;



சுருங்குதல் சாவு. நீங்கள் உங்களுக்குள் தெளிவாக இல்லை; அதன் பழியை மக்கள் மீது போடுகிறீர்கள்.

நீங்கள் மற்றவர்களின் கனவுகளை உங்களுக்கு நிஜமாக்கிக் கொள்ளும் சூழலில் சிக்கிக்கொண்டு விட்டால், எலி ஓட்டப் பந்தயத்தில் இருக்கிறீர்கள்! ஒப்பிடுதலும் பொறாமையும் மற்றவர்களின் கனவுகளைக் கடன் வாங்கிக் கொண்டு அவற்றை உங்களுடைய நிஜமாக்கிக் கொள்ளும் முயற்சியைத் தவிர வேறல்ல. எலி ஓட்டப் பந்தயத்தில் இருப்பதற்கு சக்தி அல்லது நனவாக்குகிறது. ஆனால், நிஜம் உண்மையில் உங்கள் கனவு என்பதைப் புரிந்துகொள்வதே உண்மையான சாதனை! இதைப் புரிந்து கொள்வதற்கு ஆற்றல் தேவையில்லை; புத்தி அல்லது அறிவே தேவை.

ஆற்றல் உங்கள் கனவுகளை நனவாக்கும்; அறிவு நிஜமே உங்கள் கனவுதான் என்பதைப் புரிய வைக்கும! நீங்கள் ஏற்கனவே என்னவாக இருக்க வேண்டுமோ அதுவாகத்தான் இருக்கிறீர்கள். விழித்துக் கொள்ள வேண்டிது மாத்திரமே தேவை, நீங்கள் நிஜ மாக்க முயற்சி செய்யும் மற்ற அனைத்துமே கடன் வாங்கப் பட்டதும் பொய்யானதும்தான் என்பதை அறிவு உங்களுக்குப் புரிய வைக்கும்!

நாம் எப்பொழுதும் வெளியுலகில் சாதிப்பதைத்தான் பார்க்கிறோம். இதுவே ஒப்பிடுதலுக்கும் பொறாமைக்கும் மூல காரணம். நீங்கள் வெளியுலகில் ஏதேனும் உணரத்தக்க வகையில் சாதித்திருந்தால் மட்டுமே மக்கள் உங்களை மதிக்கிறார்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

## விபத்தில் இறந்த சகோதரிகள் மறுபிறவி எடுத்த அதிசயம்!




இங்கிலாந்தில் உள்ள Hexham பகுதியில் வாழ்ந்து வந்த ஜான், ஃப்லோரன்ஸ் தம்பதியினரின் வாழ்வில் விசித்திர சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

1957 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி, அவர்கள் வாழ்வில் தீராத சோக சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அன்று தங்கள் இரு மகள்களான ஜாக்குலின் (6), ஜோன்னா (11) ஆகியவர்கள் நண்பர் ஒருவருடன் தேவாலயத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது, சாலையில் சென்று கொண்டிருந்த கார் ஒன்று இவர்கள் மீது மோதியுள்ளது. இந்த பயங்கர விபத்தில் சம்பவ இடத்திலேயே மூன்று பேரும் உயிரிழந்துள்ளனர்.

குழந்தைகளை பறிகொடுத்த சோகத்தில் இருந்த பெற்றோர், பிரார்த்தனைகளின் மூலம் தங்கள் மனதை திடப்படுத்தினாலும், மீண்டும் தங்களுக்கு ஒரு அழகிய குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில் இருந்துள்ளனர். அவர்களின் பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்த்தாற்போல விரைவிலேயே ஃப்லோரன்ஸ் கர்ப்பமடைந்துள்ளார்.

1958 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் திகதி, ஃப்லோரன்ஸ் ஜான் இரட்டை பெண் குழந்தைகள் பிறந்துள்ளனர். அந்த இரண்டு குழந்தைகளுக்கும் Gillian- Jennifer என்று பெயரிட்டுள்ளனர்.

Jennifer-d நெற்றியில் தங்களுடைய இறந்த குழந்தை ஜாக்குலினுக்கு விபத்து ஒன்றில் நெற்றியில் ஏற்பட்ட அடையாளம் இருந்ததை கண்டு ஆச்சர்யமடைந்துள்ளார். மேலும், குழந்தையின் காலில் ஜாக்குலின் பிறக்கும் போது இருந்த பிறப்பு அடையாளம் இருந்துள்ளது.

இந்நிலையில், குழந்தைகள் இருவரும் 3 மாத வயதை அடைந்தபோது Hexam பகுதியில் இருந்து Whitley Bay பகுதிக்கு இடம்பெயர முடிவெடுத்துள்ளனர்.

இதன் பின்னர் அந்த குழந்தைகள் இருவரும் சுமார் 4 வயதை எட்டும் வரை அவர்கள் Hexam பகுதிக்கு செல்லவே இல்லை.

பின்னர் இவர்கள் தங்கள் குழந்தைகளுடன் Hexam பகுதிக்கு சென்றபோது தான் பல அதிர்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெற தொடங்கியுள்ளது. அப்போது, இந்த இரட்டை குழந்தைகள் தாங்கள் இதுவரை காணாத பகுதிகளை சரியாக அடையாளம் காட்டியுள்ளனர். அந்த இடங்கள் எல்லாம் இறந்து போன குழந்தைகள் பழக்கப்பட்ட இடம் என்பது குறிப்பிடத்தக்கது. இறந்துபோன சிறுமிகள் படித்த பள்ளியை கடந்து செல்லும்போது, அந்த பள்ளியை பார்த்து அது தங்கள் பள்ளி என்று சொல்ல தொடங்கியுள்ளனர்.

இந்த குழந்தைகளின் செயலால் ஆச்சர்யமடைந்த பெற்றோர்கள், தங்களின் இறந்த குழந்தைகள் பயன்படுத்திய பொருட்களை எடுத்து காண்பித்துள்ளனர்.

அப்போது இறந்தவர்கள் விளையாடிய டெட்டிபியர் பொம்மைகளின் பெயர்களையும் மற்ற விளையாட்டு பொருட்களின் பெயர்களையும் இருவரும் சரியாக சொல்லி மேலும் அதிர்ச்சியளித்துள்ளனர்.

மேலும், இறந்த குழந்தைகள் விபத்தில் இறந்ததை உணர்த்தும் விதமாக இரட்டை குழந்தைகள் தரையில் படுத்து வினோதமாக விளையாடி வந்துள்ளனர்.


ஒருநாள் சாலையில் சென்று கொண்டிருந்தபோது நின்று கொண்டிருந்த கார் ஒன்றின் அருகே கடந்து செல்கையில், "அந்த கார் நம்மை இடிக்க வருகிறது" என்று கத்த தொடங்கியுள்ளனர்.

இந்த சம்பவங்களை பற்றி குழந்தைகளின் பெற்றோர் கூறுகையில், நாங்கள் அவர்கள் இருவரிடமும் சிறுவயதில், இறந்துபோன குழந்தைகள் பற்றி எந்த வித தகவலையும் அளித்ததில்லை என்று தெரிவித்துள்ளனர்.

பின்னர் அந்த குழந்தைகள் இருவரும் 5 வயதை எட்டிய போது, இறந்த குழந்தைகளை பற்றி பேசுவது படிப்படியாக குறைந்ததாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## ஸ்டஃப்டு நான்



**தே.பொருட்கள்:**

மைதா - 2 கப்
பால் - 1/2 கப்
தயிர் - 1 டேபிள்ஸ்பூன்
ஈஸ்ட் - 1 டீஸ்பூன்
சர்க்கரை - 1/2 டீஸ்பூன்
உப்பு - 1/2 டீஸ்பூன்
நெய் - 1 டேபிள்ஸ்பூன், வெண்ணெய் - 3 டேபிள்ஸ்பூன்

**ஸ்டஃப்பிங் செய்ய:** பனீர் துருவியது - 1 கப், பெரிய வெங்காயம் - 1
மிளகாய்த்தூள் - 1/2 டீஸ்பூன், மல்லித்தழை - சிறிதளவு, மஞ்சள்தூள் - 1/4 டீஸ்பூன், உப்பு - தே.அளவு

**செய்முறை**

இளஞ்சூடுள்ள பாலில் சர்க்கரை, ஈஸ்ட் கலந்து பத்து நிமிடங்கள் மூடி வையுங்கள். பின்னர் தயிர் கலந்து, பத்து நிமிடங்கள் மூடி வையுங்கள். இதை மாவுடன் கலந்து, உப்பு, நெய் சேர்த்து, சற்று இளக்கமாகப் பிசைந்து, ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி வையுங்கள். இரண்டு, மூன்று மணி நேரம் கழித்துப் பார்த்தால், மா இரண்டு மடங்காகி இருக்கும்.

துருவிய பனீருடன் வெங்காயம் சேருங்கள். பின், மற்ற பொருள்களை யும் ஒன்றாகக் கலந்துகொள்ளுங்கள். மாவில் சிறிது எடுத்து உருட்டி, கிண்ணம் போல் செய்து, பூரணத்தை உள்ளே வையுங்கள். நன்கு மூடி (ஸ்டஃப் செய்திருக்கும் பூரணம் வெளியே வந்துவிடாதபடி) சற்று கனமாகத் திரட்டுங்கள். தோசைக்கல்லைக் காயவைத்து, திரட்டியதை அதில் போட்டு, நடுத்தரத் தீயில் நன்கு வேகுமாறு இருபுறமும் திருப்பிவிட்டு எடுத்து, வெண்ணெய் தடவிப் பரிமாறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் இயலாமை வெளிப்பட்டுள்ளது

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளின் மூலம் நல்லாட்சி அரசாங்கத்தின் இயலாமை வெளிப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**



விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்து வடக்கில் விளக்கு ஏற்றப்பட்டுள்ளது.

இதன்மூலம், தற்போதைய அரசாங்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அஞ்சவில்லை என்றே அர்த்தம்.

நாட்டில் இயங்கி வந்த தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு தரப்புக்கள் அரசாங்கத்தை மதிப்பதில்லை.

இந்த அனைத்து நடவடிக்கைகளின் மூலமும் நல்லாட்சி அரசாங்கத்தின் இயலாமை வெளிப்பட்டுள்ளது.

நாட்டுக்கு சுதந்திரத்தை வென்று கொடுத்த வெற்றியைக் கொண்டாடாது, பிரிவினைவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததனை நினைவுகூர்வதாகத் தெரிவித்து படைவீரர்களை அரசாங்கம் இழிவுபடுத்தி வருகின்றது.

வடக்கில் புலிகளை நினைவு கூர்ந்து விளக்கு ஏற்றி பல நினைவேந்தல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கத்தின் மறைமுகமாக செயற்பட்டு வரும் பொலிஸ் நிதிக் குற்றவியல் பிரிவு அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் தரப்பினரை மறுபுறத்தில் கைது செய்து வருகின்றது. அரசியல் பழி வாங்களில் ஈடுபட்டவர்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படுவர் என சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

## எதிர்க்கட்சியினர் மீது நிதி அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களுக்கு வழங்கிய நிவாரணங்களை பொறுத்துக் கொள்ள முடியாமல் எதிர்க்கட்சி தனக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கையளித்துள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

தனக்கு எதிராக நம்பிக் கையில்லா பிரேரணை கையளித்தது அடிப்படையற்ற ஒரு விடயமாகும் என அவர் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கமைய மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கியமையினால் எதிர்க்கட்சி வங்குரோத்தடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சருக்கு எதிராக நேற்று முன்தினம் எதிர்க் கட்சி தலைவர்கள் இணைந்து சபாநாயகரிடம் நம்பிக் கையில்லா பிரேரணை ஒன்று கையளித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மாணவியின் படுகொலைக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் அன்று சாரதாம்பாள், தர்சினி இன்று வித்தியாவின் கோரப் படுகொலை இடம்பெற்றும் இனியும் நாம் மௌனம் சாதிப்பதா? சமாதானப் புறாவாக வெள்ளை உடை அணிந்த பாடசாலை மாணவியை படுகொலை செய்த பாதகரை இனியும் நாம் பாராமுகமாக இருக்காது இந்த படுகொலையுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதோடு நின்றுவிடாது எமது மக்களின் பாரம்பரிய கலை கலாசாரத்தை சீரழிப்பதற்கு முற்படும் படுகொலையாளர்களை இனங்கண்டு கடுமையான தண்டனை வழங்கி இனிமேலும் இப்படிப்பட்ட பெண்களுக்கு எதிரான படுகொலைகள் நடக்காது இருப்பதற்கு வித்தியாவின் படுகொலையின் தீர்ப்பே ஓர் பாடமாக அமைய வேண்டும் என வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## அரசியல்வாதிகளுக்குள்ள பிரதானநோய் மறதியாகும்

### புத்திக்க பத்திரண தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல்வாதிகளுக்கு இருக்கும் பிரதான நோய் மறதியாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

இன்று சொல்வதனை நாளை மறந்து விடுவார்கள்.

அதிகாரத்திற்கு வரும் முன் மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகள் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் மறந்து விடுவார்கள். இதுதான் எங்களது நாட்டின் அரசியல்வாதிகளுக்கு இருக்கும் பிரதான நோயாகும்.


தேர்தலுக்கு முன்னதாக மக்களுக்கு சேவையாற்றுவதாக பிரசாரம் செய்வார்கள்.

எனினும் வெற்றியீட்டியதன் பின்னர் 24மணித்தியாலமும் தனது குடும்பத்தை வலுப்படுத்திக் கொள்ளவே முயற்சிப்பார்கள்.

அவ்வாறான அரசியல் வாதிகளை கடல் அலையில் மாட்டிக்கொண்ட தவளை போன்று மிதக்க விட வேண்டுமென புத்திக்க பத்திரண அண்மையில் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## பல்வேறு தியாகங்களைச் செய்தே நாம் ஈழக்கொடியை வீழ்த்தினோம்

### மகிந்த கூறுகிறார்



பல்வேறு தியாகங்களை செய்தே ஈழக்கொடியை வீழ்த்தி தேசியக் கொடியை ஏற்றினோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விஹார மகாதேவி பூங்காவில் நடைபெற்ற படைவீரர் நினைவு நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 30 ஆண்டுகளாக நீடித்து வந்த பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டு இந்த நாட்டின் மைந்தர்கள் ஆயிரக்கணக்கில் உயிர்த் தியாகம் செய்து வரலாற்று ரீதியான வெற்றியை என்னுடனான குரோதம் காரணமாக நாட்டுக்கு கிடைக்காமல் போகச் செய்யக்கூடாது.

தேவை என்றால் என்னை பழிவாங்குங்கள். என்னை விமர்சனம் செய்யுங்கள். சேறு பூசுங்கள் போதவில்லை என்றால் என்னைச் சிறையில் அடையுங்கள்.

இறுதிப் போரின் போது எதிரிகளின் கொடியை கீழே வீழ்த்த ஆயிரக்கணக்கான தேசத்தின் மைந்தர்கள் உயிர்த் தியாகம் செய்ததுடன் பலர் உடல் உறுப்புக்களை இழந்துள்ளனர்.

பல்வேறு தியாகங்களைச் செய்து ஈழக் கொடியை வீழ்த்தி தேசிய கொடி ஏற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு படையினர் உயிர்த் தியாகம் செய்தது மீண்டும் பிரிவினைவாத கொடி ஏற்றப்படுவதனை காண்பதற்கல்ல. இவ்வாறான வீரமைந்தர்களை துரிதகதியில் மறந்து போன இந்த அரசாங்கம் வெட்கித் தலை குனிய வேண்டுமெனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)





யாழ். அருணோதயாக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் தரம் 1 முதல் தரம் 4 வரையிலான மாணவர்களுக்கான ஆளுமையையும் சேமிப்புத் திறனையும் ஊக்குவிக்கும் முகமாக சிறுவர் சந்தை ஒன்று சம்பத் வங்கியின் சுன்னாகம் கிளையினரால் *சிறு வயது முதலே ஆளுமை* என்ற தொனிப்பொருளில் கடந்த 14 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது. பாடசாலையின் பிரதான மண்டபத்தில் சுமார் 200 மாணவர்கள் மாதிரிச் சந்தையினை ஏற்படுத்தி தாமும் வியாபாரிகள் போன்று வேடம் புனைந்து [illegible] ஒரு மணிவரை சந்தை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபாவனையினால் யாழில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வெசாக் வார கால ஏப்ரல் மா்தம் 30ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 7ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 135 மதுபான குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாக வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர் பி.சி.யோசப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெசாக் வார காலத்தில் மது பான குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் சகல மாவட்டங்களிலும் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்தவகையில்யாழ்.மாவட்டத்திலுள்ள மதுவரி நிலையங்களின் ஊடாக மதுவரி ஆணையாளர் மற் றும் மதுவரி அத்தியட்சகர்களின் மேற்பார்வையில் 124 மதுபானக் குற்றச் செயல்களும் 11 அனுமதி பெற்ற மதுபான சாலைகளுக்கு எதிரான தொழில்நுட்ப குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கள்ளு வைத்திருந்ததாக 52 குற்றங்களும் கள்ளு விற்பனை தொடர்பாக 67 குற்றங்களும் சாராயம் விற்பனை தொடர் பாக 2 குற்றங்களும் கசிப்பு உற் பத்தி தொடர்பாக ஒரு குற்றமும் கசிப்பு வைத்திருந்தமை தொடர்பாக 2 குற்றங்களும்பதிவு செய்யப்பட்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள அந்தந்த நீதவான் நீதிமன்றங்களில் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




## புங்குடுதீவில் மாணவி படுகொலையைக் கண்டித்து இன்று

# வலி.தெற்கில் கடையடைப்பு

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவில் 18 வயது மாணவி காமுகர்க ளால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, காட்டுமிராண்டித் தனமாகக் கொலைசெய்யப்பட்டமைக்கு வலி.தெற்கு வர்த்தக சம்மேளனம் தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அத்துடன் சகல வியாபார நிலையத்தினரும் வன் புணர்வுக்கு எதிரான எதிர்ப்பினை வெளிப்படுத் துமுகமாக இன்று புதன்கிழமை கடைகளை மூடி பகிஷ்கரிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ள தாக வலி.தெற்கு வர்த்தக சம்மேளனத் தலைவர் சி.ஹரிகரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

புங்குடுதீவை சேர்ந்த வித்தியா என்ற பாடசாலை மாணவி காம வெறிபிடித்த 9 காடையர்களால் பலாத்கார வன்புணர்வுக்கு உட்படுத தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறானதொரு சம்பவம் தமிழர்வாழ் பிரதேசத்தில் நடைபெற்றிருப்பது மிகவும் கேவலமானதும் அசிங்கப்படவேண்டியதுமான ஒரு செயற்பாடாகும். இந்தக் காடையர்களின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடு எமது ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக்காமக் காமுகர்கள் நீதியின் முன்நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் உயிரிழந்த மாணவியின் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்கவேண்டியும், இனி எந்தக் காலத்திலும் இவ்வாறானதொரு காமக்கொலைவெறி இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலி.தெற்கு வர்த்தகர்கள் அனைவரும் கடைகளைமூடி பகிஷ்கரிப்பை மேற்கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்குமாறும் நாம் வேண்டிக் கொள்கின்றோம்.

எமது ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக மருந்தகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், உணவகங்கள், துவிச்சக்கர வண்டி திருத்தும் நிலையங்கள், சந்தை வியாபாரிகள், வெதுப்பகங்கள் மற்றும் அனைத்து சில்லறை வியாபார நிலையங்கள் அனைத்தும் இன்று முழுநேரக் கடையடைப்பை மேற்கொண்டு வியாபார நிலையங்களில் கறுப்புக் கொடிகளைத் தொங்கவிட்டு எமது ஒட்டுமொத்தக் கண்டனத்தையும் தெரிவிக்கவேண்டும்.

அத்துடன் எம்முடன் இணைந்து எமது இந்தக் கண்டன எதிர்ப்புக்கு முச்சக்கரவண்டி ஓட்டுநர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், பார ஊர்திகள் உரிமையாளர் சங்கம் ஆகியோரின் ஆதரவையும் நாம் வேண்டி நிற்கின்றோம்.

இன்று புதன்கிழமை மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தால் யாழ்.நூலகத்துக்கு முன்பாக முற்பகல் 10 மணிக்கு மாணவி படுகொலையை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட உள்ளது. எமது வர்த்தகர்கள் அனைவரும் இளைஞர் சம்மேளனத்தின் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு தமது பூரண ஆதரவை நல்கி, ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்ளுமாறும் வேண்டிக் கொள்கின்றேன் என அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)

யாழ்.செய்திகள்

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கு சாந்தையம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடை பெறவுள்ளது. இவ்விழாவில் எதிர் வரும் 28 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 29 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் 30ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ-3-7)

• • • • • • • • • • • • • • •

யாழ்.நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம்-2015 எதிர்வரும்23ஆம்திகதிசனிக்கிழமை மு.ப10.30 மணியளவில்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர் ந்து 11தினங்கள் இடம்பெறும். எதிர் வரும் ஜூன் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

• • • • • • • • • • • • • • •

## வளந்துப்பானை விசேட பூஜை

மல்லாகம் நீலியம்பனை திருமருஞ்சோலை அருள்மிகு பெரியநாயகி தாயார் சமேத பெரிய தம்பிரான் திருக்கோயிலில் வருடாந்த வைகாசிப் பெரும் பொங்கல் விஞ்ஞாபனம் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை விளக்குவைப்பு வைபவத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மல்லா கம் சாடியடியில் வளந்துப்பானை விசேட பூஜையும் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.(இ-7)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரம் கற்று உயர்தரத்துக்கு தகைமை பெற்ற மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

கல்லூரியில் இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெற இருந்த புதிய உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால்நாளை மறுதினம் 22ஆம்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என அதிபர் அறிவித்துள்ளார். (இ

# பெண் விடுதலை சிந்தனை அமைப்பும் மாணவியின் கொலைக்குக் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் பெண்கள் , மாணவிகள், சிறுவர்கள் மீதான பாலியல் சித்திரவதைகளும் வன்கொடுமைகளும் கொலைகளும் தொடர்ச்சியா கவே நீண்டு செல்கின்றது. இதில் ஒன்றாகவே கடந்த வாரம் புங்கு டுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா (வயது 18) மீதான வன்கொடுமை கொலை யாகும்.

இவற்றைத் தடுத்து நிறுத்தக் கூடிய சமூகச் சூழலோ, சட்ட வலிமை கொண்ட செயற்பாடுகளோ இல்லாத நிலையே இன்று காணப்படுகின்றது.

எனவே பெண்கள், மாணவிகள், சிறுவர்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள், சித்திரவதைகள், கொலைகள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்தவும் அவர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதத்தை சட்டரீதியாகவும் நடைமுறைவழிகளாலும் வழங்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் விரைந்து செயற்படுத்த வேண்டும் எனப் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு கேட்டுக் கொள் கின்றது.

அதேவேளை புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் மீதான பாலியல் வன்கொடுமைப் படுகொலைக்கு கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கின்றது.

அதில் சம்பந்தப்பட்ட வெறிகொண்ட கயவர்களை எவ்வகையிலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ள இடமளிக்கக்கூடாது. இவ்வாறு பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் அமைப்பாளர் சந்திரா நவரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் இவ் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

கடந்த வாரம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கொடூரமாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமையானது கல்மனம் படைத்தவர்களைக்கூட மனங்கலங்க வைத்த சம்பவமாகும்.

இதுபோன்ற பெண்கள் மீதான பாலியல் வக்கிரச் செயற்பாடுகளும் வன்கொடுமைகளும் சித்திரவதைகளுக்கும் தனியே சட்டத்தையும் சட்டத்தின் காவலர்களையும் எதிர்பார்த்து நிற்க முடியாது. இவைகளின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஏனையவர்கள் அரசியல் சமூகத் தலைவர்கள் என்போர் தமது சமூகக் கடமைகளில் இருந்து தவறிக்கொள்கிறார்கள். பெண்களை உயிர் உள்ள நுகர்வுப் பொருட்களாகப் பயன்படுத்தி வரும் பிரதான நச்சுத்தனமான கலாசாரப் போக்கு தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இன்றைய வணிகமும் இலாபம் பெறும் அவாவும் கொண்ட சமூகச் சூழலில் இருந்து பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை எமது பெண் விடுதலைச் சிந்தனை அமைப்புச் சுட்டிக்காட்டுகின்றது என அந்த அமைப்பு விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சிறுநெருஞ்சில்

Botanical Name: Tribulus terrestris
Family: Zygophyllaceae
Engl: Calthrops
Sinh: Gokatu

இத்தாவரக் குடும்பத்தில் ஏறக்குறைய25 பேரினங்களும் 200 சிற்றினங்களும் உள்ளன. உலகில் வெம்மையான சற்று உப்பு மிகுந்துள்ள மாவட்டங்களில் இவை காணப்படுகின்றன. 10 செ.மீற்றர் முதல் 20 செ.மீற்றர் நீளமான மஞ்சள் நிற ஆணிவேர். 6-25 கிளைகள் நிலமட்டத்திலேயே உண்டாகி 40 செ.மீற்றர் முதல் 125 செ.மீற்றர் வரை நீண்டு தரையில் படர்ந்து வளர்கிறது. இறகு வடிவ கூட்டிலை. எதிரிலை அடுக்கு முறையில் தண்டில் இணைந்துள்ளது. இரு இலைச் செதில்கள் உண்டு. ஒவ்வொரு கணுவிலும் உள்ள இலைகளில் ஒன்று பெரியது. மற்றொன்று சிறியது. இலை அடுத்த கணுவில் மாறி இணைந்திருக்கும். இவ்வாறு மாறி மாறி இண்ணந்திருப்பதை கிளையின் நுனிவரையில் காணலாம்.5 அடுக்கான, ஒழுங்கான, இருபாலான, சமச்சீரான மஞ்சள் நிறமான மலர்கள் காணப்படும்.5கோணமுடையகாயின்மேல் முட்கள் காணப்படும். (4 கூரிய முட்கள் ஒரு காயில் காணப்படும்) கனியுறை கூரிய முள்ளாக நீளும். இக்கனி நெருஞ்சிப்பழம் எனப்படும்.



### மருத்துவ குணங்கள்

நெருஞ்சிக்காயை பொடி செய்து தண்ணீரில் கலந்து காய்ச்சிக் குடித்தால் நீர்ளரிச்சல்,சிறுநீர் குறைவு, நீர் அடைப்பு, சதை அடைப்பு போன்ற குறைபாடுகள் தீரும். நெருஞ்சிக்காய் 10, சிறுபீளை (தேங்காய்ப்பூக் கீரை) வேர் 10 கிராம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்துப் பசும் பாலில் கலந்து குடித்தால் சிறுநீர் ஒழுக்கு குணமாகும்.

நெருஞ்சில் விதையை ஒரு கைப்பிடி செவ்விளநீரில் ஊறவைத்து அரைத்து, காலை, மாலை இரு வேளையும் தொடர்ந்து 10 நாட்களுக்கு சாப்பிட்டால் சிறுநீரில் இரத்தம் கலந்து வருவது நிற்கும்.

,நெருஞ்சிக்காய், நெருஞ்சில் வேர் இரண்டையும் பச்சரிசியோடு சேர்த்து வேகவைத்து கஞ்சியை வடித்து அதில் சீனி சேர்த்துக் குடித்தால் வெள்ளை சாய்தல், நீர்க்கடுப்பு போன்றவை குணமாகும்.

நெருஞ்சில், கொத்தமல்லி இரண்டையும் சம அளவு எடுத்து குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி காலை, மாலை 40 நாட்கள் தொடர்ந்து குடித்துவர சிறுநீரகக் கற்கள் கரையும்.

நெருஞ்சில், மிளகு, சிறு நாகம்பூ மூன்றையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து தினமும் காலை, மாலை 2 கிராம் அளவு சாப்பிட்டுவந்தால் இருதயம் பலப்ப டும். இதய நோய்களுக்கும் சிறந்த நிவாரணி. நெருஞ்சிக்காய் உள்ள செடியை வேரோடு பிடுங்கி வெள்ளாட்டுப்பால் சேர்த்து இடித்துச்சாறுபிழிந்து குடித்து வந்தால் ஆண்மைக் குறைபாடு நீங்கும்.

நெருஞ்சி முழுச்செடி-10, சுக்கு-1 பங்கு, மிளகு -1 பங்கு, திப்பிலி-1 பங்கு, இலவங்கம்-4 பங்கு, ஏலம்-4 பங்கு, குங்குமப்பூ-1பங்கு, சாதிக்காய்-3 பங்கு, மூங்கிலரிசி-1 பங்கு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அருவல் நொருவ லாக இடித்து 16 பங்கு நீர் சேர்த்து 1/4 பங்காகக் காய்ச்சி வடித்து 30-60 மில்லி குடிக்க வெள்ளை சாய்தல், சிறுநீர் எரிச்சல் நீங்கும்.

நெருஞ்சில் செடி -10, இலவங்கப்பட்டை -5 கிராம், ஏலக்காய்- 6 கிராம் சேர்த்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 2 கிராம் அளவு தினமும் இருவேளை சாப்பிட்டுவர காமாலை நோய் நீங்கும்.

சிறுநெருஞ்சிச்செடி-10 கிராம், மாவிலங்கப்பட்டை-10 கிராம், சுரை விதை-10 கிராம் எடுத்து பொடித்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி காலை, மாலை 40 நாட்கள் அருந்த சிறுநீர்க் கற்கள் கரையும்.

### சிறுநெருஞ்சில்பொடி

பசும்பால் 1/4 லீற்றரில் நெருஞ்சி முள்ளை நசுக்கிப்போட்டு வேக வைத்துஉலர்த்த வேண்டும். உலர்த்திய நெருஞ்சிகளை பொடி செய்து இதனுடன் கருப்பட்டி, கற்கண்டு, ஏலக்காய் இவைகளையும் பொடி செய்து எல்லாவற்றையும் சேர்த்து பொடித்துவைத்துக்கொள்ளவும் 4 கிராம் அளவு எடுத்து 200 மில்லி காய்ச்சி ஆறிய பசும்பாலில் போட்டுக் கலக்கி குடிக்கவும். தாதுக்கள் பலப்படும். சிறுநீரகத்திற்கு சிறந்ததாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# என்னை வீழ்த்த நினைத்தவர்கள் ஒருபோதும் வென்றது இல்லை!

## ஜெயா ஆவேசம்

(கொழும்பு)

என்னை வீழ்த்த நினைத்தவர்கள் ஒருபோதும் வென்றதில்லை என்றும், கட்சியினர் நினைத்தது குறித்த நேரத்தில் நடக்கும் என்றும், இதை யாராலும் தடை செய்ய முடியாது என்றும் அதிமுக பொதுச் செயலாளரும் இந்தியாவின் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான ஜெயலலிதா ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில, அதிமுக தலைமையின் மீது மிகுந்த பாசமும், அன்பும் கொண்ட கட்சியினர் எந்தச் சூழ்நிலையிலும் நிதானம் இழக்காமல் நம்பிக்கையோடும், மன உறுதியோடும் செயற்பட வேண்டும் என பலமுறை கேட்டுக் கொணடிருக்கிறேன்.

அரசியல் எதிரிகள் கட்சியின் வள்ர்ச்சியைக் கண்டும், வெற்றி மீது வெற்றி வந்து நம்மைச் சேருவதைக் கண்டும் பொறாமை கொண்டவர்களாக பல்வேறு பொய்ப் பிரசாரங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

வீழ்த்த நினைத்தவர்கள் வென்றதில்லை: என்னை வீழ்த்த நினைத்தவர்கள் ஒருபோதும் வென்றதில்லை. பொய்ச் செய்திகளையும், பொருளற்ற வதந்திகளையும் பரப்பி, அதன் மூலமாவது அரசியல் மறுவாழ்வு பெற்றுவிட முடியுமா என முயற்சிக்கும் வீணர்கள் நமக்கு எதிராக தொடர்ந்து பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபடுகின்றனர். இவற்றையெல்லாம் புறந்தள்ள வேண்டும்.

அனைத்து சோதனைகளையும் கடந்து வெற்றி முகட்டில் நாம் நிற்கின்ற நேரமிது. மகிழ்ச்சியும், பெருமிதமும் பொங்க, ஆனந்தத்துடன் வெற்றி விழா கொண்டாடும் காலமிது. சட்டத்தின் ஒழுங்குகளையும், வழிகாட்டும் நெறிகளையும் மதித்து அவற்றின்படி நம்முடைய அரசியல், ஆட்சி, நிர்வாக நடவடிக்கைகள் அமைய வேண்டும். அப்படித்தான் எப்போதும் நாம் செயற்பட்டு வந்திருக்கிறோம்.

எனவேதான், அடுத்தடுத்து நாம் மேற்கொள்ள வேணடிய நடவடிக்கைகள் ஒருதிட்டமிட்ட கால அட்டவணைப்படி நடைபெற்று வருகின்றன. அதில் எந்தக் குழப்பமும் இல்லை. எந்தச் சிக்கலும் இல்லை.

நிதானமும், ஒழுங்கும் சட்டத்தின் வழிகாட்டுதல்படி அதிமுகவால் பின்பற்றப்படுவதைத் தவறாகப் புரிந்து கொண்டு, நிதானம் இழக்கும் அவசரச் செயல்களில் கட்சியினர் ஈடுபடுகின்றனர். இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு என்னை மன வேதனையில் ஆழ்த்த வேண்டாம்.

கட்சியினர் நினைத்தது குறித்த நேரத்தில் நடக்கும். இதை யாராலும் தடை செய்ய முடியாது. ஆகவே, யாரும் கவலைப்பட வேண்டாம்" என்று கூறியுள்ளார்.

மேலும் ஜெயலலிதா தனது அறிக்கையில், ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட அதிமுக பிரமுகர் குடும்பத்திற்கு, குடும்ப நல நிதியுதவியாக 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா மீதான சொதது குவிப்பு வழக்கில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் என கர்நாடக அரசின் தலைமை சட்டத்தரணி ரவிவர்மகுமார், கர்நாடக சட்டத்துறை அமைச்சர் ஜெயசந்திராவுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பி உள்ளார்.

இந்நிலையில், இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 34.5<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L அரச தொழில்<br>தொ.இ: B/4519 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc வங்கியாளர்<br>தொ.இ: G/4546 |
| பிறப்பு: 1984 RC<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 19.25<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc தனியார் தொழில்<br>தொ.இ: B/4520 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 11.5<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L விவசாய டிப்ளோமா<br>தொ.இ: G/4552 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 49.5 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L சொந்தத் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4523 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 19 செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>தொ.இ: G/4553 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 18<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc, MSc அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/4524 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 13 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4554 |


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் நேற்று களேபரம்













புங்குடுதீவில் பாடசாலை மாணவியொருவர் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நீதி கோரியும் யாழ்ப்பா முழுவதும் நேற்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் யாழ்.நகர் நேற்றையதினம் பெரும் பரபரப்புடன் காணப்ப யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள் அனைத்தும் வித்தியாவின் படுகொலைக்கு நீதி கோரி போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெ வருகின்றன.

மேலும் யாழ்.நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டும் எதிர்ப்பு காட்டப்பட்டன. யாழ்.நகர் மத்தியில் இளைஞர் பெரும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையம் மற்றும் வைத்தியசாலைகள் அனைத்தும் இளைஞர்க முற்றுகையிடப்பட் டிருந்தது. இதனால் நேற்றையதினம் யாழ்.நகர் போர்க்களம் போல் காட்சியளித்தது. இப்போராட்டங்கள் இ தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible]ளின், பொ. சோபிகா, புன்னாலைக்கட்டுவன் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்திடமுள்ள 1000 ஏக்கர் மரமுந்திரிகை தோட்டம் விரைவில் பொறுப்பேற்கப்படவுள்ளது

## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவிப்பு

(மல்லாவி)

**பூநகரி பிரதேச செயலக பிரிவில் இராணுவத்தின் மேற்பார்வையிலுள்ள ஆயிரம் ஏக்கர் மரமுந்திரிகை காணியை இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனம் பொறுப்பேற்கவுள்ளது என இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தலைவர் எல்.சி.விஜயவர்ணசூரியா தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வளாகத்தில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் அலுவலகம் ஒன்றுநேற்று முன்தினம்காலை திறந்து வைக்கப்பட் டது.

கட்டடத்தைதிறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையிலே,

கிளிநொச்சி மாவட்டத்தில் மரமுந்திரிகை செய்கையை மேம்படுத்தும் நோக்குடன் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின்கீழுள்ளஇலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் தனது அலுவலகத்தை இன்று (கடந்த1 8 ஆம் திகதி திறந்து வைத்துள்ளது.

இதனூடாக பூநகரி பிரதேச செயலகம் பிரிவில் இராணுவத்தின் மேற்பார்வையிலுள்ள ஆயிரம் ஏக்கர் மரமுந்திரிகை காணியை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் பெறுப்பேற்கவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏனைய அரசிற்கு சொந்தமான மரமுந்திரிகை தோட்டங்களினை மரமுந்திகை கூட்டுத்தாபனம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் ஊடாக பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்ற தோட்டங்களினை அந்தப் பிரதேச மக்களின் பயன்பாட்டிற்காக வழங்க வேண்டியுள்ளது.

விவசாயிகளை ஊக்கப்படுத்தி அவர்களுக்கான மானியங்களை வழங்கி புதிய மரமுந்திரிகை தோட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின்தலைவர்எல்.சி.விஜய வர்ண சூரியா கூட்டுத்தாபனத்தின் பிரதி பொது முகாமையாளர் பி.கொடிகார, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி விரிவாக்கல் உத்தியோகத்தர் பி. சுரேந்திரா, சந்தைப்படுத்தல் அதிகாரிஜெயதிஸ்ஸஉட்படஅரச மற்றும் அரசசார்பற்றதிணைக்களங்களின் அதிகாரிகள் கிராமிய பொது அமைப்புக்களின் பிரதிநிகள் எனப் பல தரப்பினர்கலந்துகொண்டனர். (2-15)




## "சமூகமே பெண்ணினத்தை காப்பாற்ற எழுச்சி கொள்"

### மாணவியின் கொலைக்கு வவு.இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள் ஆர்ப்பாட்டம்




(குருமன்காடு)

புங்குடுதீவு மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவியான சிவலோகநாதன் வித்தியாவை வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்த குற்றவாளிகளுக்கு சார்பாக சட்டத்தரணிகள் முன்னிலையாகக் கூடாது என்பதை வலியுறுத்தி வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா இறம் பைக்குளம் மகளிர் கல்லூரி முன்பாக நேற்றுக் காலை ஹொரவப்பொத்தானை வீதியில் இடம்பெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பாட ாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள், காவலென்று போலியாய் வேலிகள் எமக்கு வேண்டாம், போதைவஸ்துப் பிரயோகம் போக்குகிறதே எம் உயிரை. உடனடியாக தடை செய், சட்டத்தரணிகளே மாணவர் கண்ணீரில் காசு உழைக்காதே, எம் சமூகமே பார்த்திருந்தது போதும்.

பெண்ணினத்தை காப்பாற்ற எழுச்சி கொள், அரசே தவறுகள் செய்பவர்க ளுக்கு தண்டனை கொடு, சட்டத்தரணிகளே மாண வரைக் காப்பாற்ற முன்வா, நீதி தேவதையே மாணவிகளை திரும்பிப் பார் என எழுதப்பட்ட பதாகைகளை தம்முடன் வைத்து ஈடுபட்டிருந்தனர். (2-250)

## எரிகாயங்களுடன் குடும்பஸ்தர் மலையாளபுரத்தில் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி-1)

பற்றைகள் சூழ் ந்துள்ள பாழடைந்த கட்டடத்தினுள் இருந்து உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த அந்தோனிசாமி ரொனி (வயது-47) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே நேற்று காலை 9 மணியளவில் மீட்கப்பட்டவராவார்.



இது தொடர்பில் தெரிய வருவதாவது

வீட்டிலிருந்து நேற்று காலை மண்ணெண்ணெய் நிரப்பிய கானுடன் சென்ற பிரஸ்தாப நபர் நீண்ட நேரமாக வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் வீட்டிற்கு அருகாமையிலிருந்த பாழடைந்த வீட்டிலிருந்து திடீரென புகை கிளம்பியது.

இதனையடுத்து அயலவர்கள் ஓடிச் சென்று பார்த்த வேளை அந்நபர் உடல்முழுவதும் எரிந்த நிலையில் காணப்பட்டார். இதனையடுத்து கிளிநொ ச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டனர். (2-277)

## துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் இன்று கண்டனப் போராட்டம்

(கிளிநொச்சி)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் மாணவர்களின் எதிர்கால பாதுகாப்பை வலியுறுத்தியும் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர் இன்று புதன்கிழமை பிற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கண்டனப் போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளனர். இக் கண்டனப் போராட்டம் மாணவர்கள்கல்வியிலுகின்ற பாடசாலைகளுக்கு முன்பாக நடைபெறவுள்ளது. (2-15)

## மாணவிக்கு இழைக்கப்பட்ட கொடூரத்துக்கு பாடசாலை சமூகம் இணைந்து எதிர்ப்பு






புங்குடுதீவில்பாலியல்வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவியின் கொலைக்கு நீதி கிடைக்கக்கோரி மு/முள்ளியவளை வித்தியானந்தக்கல்லூரிமாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் நேற்று முற்பகல் 10.30மணியளவில் பாடசாலை முன்றலில் ஒன்று கூடி பின்னர் பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக பாடசாலை முன்பாக பிரதான வீதியோரமாக நின்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் குடும்பத்தாருக்கு நீதி கிடைக்க வலியுறுத்தியும் இதுபோன்ற கொடூரச் செயல்களைத் தடுக்கக் கோரியும் மேற்படி பாடசாலை சமூகம் பாடசாலை முன்பாக பிரதான வீதியோரமாக ஒரு மணித்தியால ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

"எதிர்கால சிற்பிகளை சீரழிக்காதே,அரசாங்கமேகொடியவர்களை தூக்கிலிடு, பெண்களை கண்களாக மதியுங்கள், அழிக்காதே மாணவர்கள் வாழ்வை சீரழிக்காதே போன்ற பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம், மு/முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்,மு/சிலாவத்தை அ.த.க.பாடசாலை, மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு முல்லைத்தீவு கச்சேரியைச் சென்றடைந்து கோஷங்களை எழுப்பியவாறுபோராட்டத்தினை மேற்கொண்டனர். இறுதியில் மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட மகஜர்முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ் வரனிடம் கையளிக்கப்பட்டது. (2-302)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கண்ணாடிப் புலி



ராம்லால் முகம் பார்க்கும் கண்ணாடிகளை விற்பனை செய்பவன். அவனுக்கு சொந்தமாகக் கடை இல்லை. பெரிய கண்ணாடிக் கடைகளிலிருந்து வாங்கி வந்து கிராமங்களில் விற்பான்.

ஒருமுறை அவன், காட்டு வழியாக ஒரு கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தான். அந்தக் காட்டில் 18 புலிகள் நடமாடுவதாகப் பேச்சு உண்டு. காட்டில் சற்று தூரம் வந்ததும் புலியின் உறுமல் சத்தம் கேட்டது.

ராம்லால் திடுக்கிட்டு, சத்தம் வந்த திசையைக் கவனித்தான். சற்றுத் தொலைவில் ஓர் அடர்ந்த புதர். அதன் நடுவில் ஒரு புலி. அதன் கண்கள் தகதக எனச் சிவந்து மின்னின. வேட்டைக்காரர்கள் அதற்குக் கொள்ளிக்கண் என்று பெயர் வைத்திருந்தனர்.

கொள்ளிக்கண் புலி, ராம்லால மீது பாயத் தயாரானது. ராம்லால் மூளை சுறுசுறுப்பானது. அவன் ஜோல்னாப் பையில் இருந்த கண்ணாடிகளில் மிகப் பெரிய கண்ணாடியை எடுத்துப் புலியை நோக்கி நீட்டினான். "வாடா கொள்ளி! உன்னை மாதிரியே ஒரு புலியைப் பிடிச்சு இதில் அடைச்சு இருக்கேன். உன்னையும் பிடிச்சு சர்க்கஸ்காரனுக்கு வித்திடுறேன்" என்று கூச்சலிட்டான்.

கண்ணாடியில் உள்ள புலியைக் கொள்ளிக்கண் கவனித்தது. மனிதர்கள், புலிகளைப் பிடிப்பதைக் கொள்ளிக்கண் பார்த்து இருக்கிறது. 'இவனும் புலி பிடிக்கறவன்' என்று நினைத்து, வாலைச் சுருட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்தது.



அது மற்ற புலிகளையும் சந்தித்து, புலி பிடிப்பவன் வந்துள்ளதாக எச்சரித்தது. அவனிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப் புலிகள் திட்டமிட்டன.

அன்று இரவு. காட்டு விலங்குகளுக்காக அஞ்சி ராம்லால் ஓர் ஆலமரத்தில் ஏறி, ஒரு பெரிய கிளையில் சாய்ந்து கொண்டான். திடீரென்று பல இடிகள் இடிப்பதுபோல் கீழே சப்தம் கேட்டது.

ராம்லால் இலைகளை விலக்கிக் கீழே பார்த்தான். அவனுக்கு மூச்சு நின்றுவிடும்போல் தோன்றியது. கீழே வட்ட வரிசையாகப் புலிகள். அந்த மரத்தின் கீழ்தான் புலிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. மங்கிய நிலவு ஒளியில் ராம்லால் அவற்றை எண்ணிப் பார்த்தான். 18 புலிகள் உறுமியபடியும், முகத்தைத் தேய்த்தபடியும், வாலைச் சுழற்றியபடியும் சுற்றிச் சுற்றி வந்தன.

கொள்ளிக்கண் அன்று பகல் தனக்கு ஏற்பட்ட பயங்கரமான அனுபவத்தை நடுக்கத்துடன் விவரித்தது. "நான் அவனிடமிருந்து தப்பியது மகா அதிசயம்" என்றது.

அதைக் கேட்டு மற்ற புலிகள் உடலைச் சிலுப்பிக்கொண்டன.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த கிழட்டுப் புலி 'நீ பார்த்த புலி உன்னைப் பார்த்து உறுமியதா?' என்று கேட்டது.

'இல்லை. என்னைப் பாரீத்த படியே இருந்தது.' என்றது கொள்ளிக்கண் புலி.

'அப்படி வா வழிக்கு. அது வெறும் பொம்மைப் புலி. நம்ம உடம்பில் எவ்வளவு சதை இருக்கு. நம்மை ஒரு சின்ன சட்டத்தில் அடைச்சுட முடியுமா? அப்படி சுருங்குறதுக்கு நம்ம உடம்பு என்ன பஞ்சு மிட்டாயா?' என்றது.

அப்போது இடைமறித்து இன்னொரு புலி 'தாத்தா, மனித வாடை அடிக்குது. பேச்சை நிறுத்திட்டு மோப்பம் பிடிங்க. இந்த மரத்தின் மேலேயிருந்துதான் வாடை வருது. புலி பிடிக்க வந்த மனுசன இந்த மரத்து மேலதான் இருக்கணும்' என்றது.

கிழட்டுப் புலி ஆமோதித்தது. அது மற்ற புலிகளிடம் 'நாம் ராத்திரி பூரா இங்கேயே டேரா போடுவோம். அவன் எப்படியும் காலையில் மரத்தைவிட்டு இறங்கி வருவான். அப்போ அவனை பிடிச்சு காலை ஆகாரமா சாப்பிடலாம்' என்றது.

கிழட்டுப் புலியின் பேச்சைக் கேட்டு ராம்லால் நடுங்கினான். 'ஒரு புலியை ஏமாற்றலாம். இத்தனை புலிகளை எப்படி சமாளிப்பது?' என்று குழம்பினான்.

அப்போது காற்று பலமாக வீசியது. கிளைகள் வேகமாகக் குலுங்கின. அதனால் இன்னொரு கிளையில் தூங்கியபடி இருந்த ஒரு குரங்கு, தடுமாறிக் கீழ்நோக்கி விழத் தொடங்கியது.

ராம்லாலின் மூளை சுறு சுறுப்பானது. அவன் புலிகளுக்குக் கேட்கும்படி கத்தினான்.

'குரங்கு நண்பா, கீழே நல்ல வேட்டை காத்திருக்கு.

நீ நேத்திக்கு ஒரு புலியைப் பிடிச்சியே. அது மாதிரி நிறையப் புலிகள் கீழே இருக்கு.

ஒரு குதி குதிச்சு ஒவ்வொரு புலியா பிடிச்சுக்கிட்டு வா. அதுகளை சட்டத்தில் அடைச்சுடுறேன' என்றான்.

புலிகள் அவனது கர்ஜனையைக் கேட்டு நடுங்கின. அதே சமயம், குரங்கு கிழட்டுப் புலியின் மீது வந்து விழுந்தது.

அது விழுந்த வேகம், கிழட்டுப் புலியைத் திக்குமுக்காடச் செய்தது.

அது அதிர்ச்சியில் ஓடத் தொடங்கியது.

தலைமைப் புலி ஓடியதைக் கண்டு மற்ற புலிகளும் நாலா பக்கமும் சிதறின.

காலையானதும் ராம்லால் தெம்பாக மரத்திலிருந்து இறங்கி, கிராமம் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

## 05.2015 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 526 - சிரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 300,000 பேர் வரையில்-கொல்லப்பட்டனர்.
- 1498 - போர்த்துக்கீச மாலுமி வாஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக்கோடு நகரை அடைந்தார்.
- 1570 - உலகின் முதலாவது நவீன நிலவரையை (atlas) ஆபிரகாம் ஓர்ட்டேலியஸ் வரைந்தார்.
- 1605 - ரோமைச் சேர்ந்த கத்தோலிக்க குரு தத்துவ போதக சுவாமிகள் கோவா வந்து சேர்ந்தார்.
- 1813 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் படைகளுடன் ஜேர்மனியின் சாக்சனி நகரில் நுழைந்து ரஷ்யா மற்றும் புரூசியாப் படைகளுடன் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.
- 1869 - யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு இணைப்பு வேலை நிறைவடைந்தது.
- 1873 - லேவி ஸ்ட்ராவுஸ், ஜேக்கப் டாவிஸ் ஆகியோர் இணைந்து செப்புத் தட்டாணியுடனான நீல ஜீன்சுக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1882 - ஜேர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முத்தரப்புக் கூட்டணியை ஏற்படுத்தின.
- 1891 - தோமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது உடல் அசைவு ஒளிப்படக்கருவியைக் காட்சிபடுத்தினார்.
- 1902 - ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து கியூபா விடுதலை பெற்றது. தொமாஸ் எஸ்ட்ராடா பால்மா முதலாவது அரசுத் தலைவரானார்.
- 1940 - முதல் தொகுதி சிறைக்கைதிகள் அவுஷ்விட்ஸ் வதை முகாமை வந்தடைந்தனர்.
- 1949 - குவோமிங்தான் அரசு தாய்வானில் இராணுவ ஆட்சியை அறிமுகப்படுத்தியது.
- 1980 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் கனடாவிலிருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக 60 விழுக்காட்டினர் வாக்களித்தனர்.
- 1983 - எயிட்ஸ் நோயை உண்டாக்கும் கிருமிகளைக் கண்டுபிடித்த செய்திகள் முதற் தடவையாக வெளியிடப்பட்டன.
- 1995 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில் கனடாவிலிருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக பெரும்பான்மையானோர் வாக்களித்தனர்.
- 1999 - புளூருத் (Bluetooth) வெளியிடப்பட்டது.

### பிறப்புக்கள

- 1799 - பல்சாக், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1850)
- 1845 - அயோத்தி தாசர், தமிழறிஞர் (இ. 1914)
- 1860 - எடுவர்டு பூக்னர், ஜேர்மனிய வேதியியல் அறிஞர் (இ. 1917)
- 1894 - சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், காஞ்சி காமகோடி பீட குரு (இ. 1994)

### இறப்புகள

- 2005 - செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1943)
- 1506 - கிறிஸ்தோபர் கொலம்பஸ், இத்தாலியக் கடற் பயணி (பி. 1451)
- 1947 - பிலிப் லெனார்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1862)
- 1957 - த. பிரகாசம், இந்திய சுதந்திர போராட்ட வீரர், சென்னை மாகாணத்தின் முன்னாள் முதல்வர். (பி. 1872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

...ஏழைப் பெண்களுக்கு, ரஜினி காந்த் தன் சொந்த செலவில் திருமணம் நடத்தி வைத்தார்.

முதன் முதலாக, 1997 ஜுலை 14 ஆம் திகதி 20 பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தார்.

இந்த திருமண நிகழ்ச்சி ரஜினியின் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் இருந்து 20 ஏழைப் பெண்களையும், அவர்களை மணக்கப்போகும் 20 வாலிபர்களையும் ரஜினிகாந்த் ரசிகர் மன்றம் தேர்ந்து எடுத்திருந்தது.

திருமண மண்டபத்தில் 20 ஜோடிகளுக்கும் 20 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

அந்தந்த இடத்தில் வந்து ஒவ்வொரு ஜோடியினரும் 8.30 மணிக்கு அமர்ந்தனர். 18 இந்து ஜோடிகளுக்கும் 18 சாஸ்திரிகள் இந்து வைதீக முறைப்படி திருமணம் நடத்தி வைத்தார்கள்.

20 ஜோடிகளில் ஒரு ஜோடி முஸ்லிம் மதத்தையும், இன்னொரு ஜோடி கிறிஸ்தவ மதத்தையும் சேர்ந்தவர்கள்.

அவர்களுக்கு அவர்கள் மத சம்பிரதாயப்படி திருமணம் நடந்தது.




**தாலி கட்டினார்கள்**

காலை 9.05 மணிக்கு ரஜினிகாந்தும், மனைவி லதாவும் திருமணம் நடந்த இடத்துக்கு வந்து அமர்ந்தனர்.

அவர்கள் வந்ததும் ஒரு மணி நேரம் வேத மந்திரங்களை புரோகிதர்கள் சொன்னார்கள்.

அதன் பிறகு மணமகள்களின் பெற்றோர், தங்கள் மகள்களின் கையை பிடித்து மணமகன்களின் கையில் கொடுத்தனர்.

பிறகு மாலை மாற்றிக்கொணடனர்.

9-55 மணிக்கு கெட்டிமேளம ஒலித்தது. இந்த கோலாகலமான காட் சியை ரஜினிகாந்தும், லதாவும் கண்டு களித்தபடி கையெடுத்து கும்பிட்டு அட்சதை தூவினார்கள்.

**சந்திப்பு**

திருமணம் முடிந்ததும், ரஜினிகாந்தும், லதாவும் அந்த இடத்திலிருந்து எழுந்து, ஒவ்வொரு ஜோடியையும் தனித்தனியாக சந்தித்தனர்.

அவர்களது காலில் மணமக்கள் விழுந்து ஆசி பெற இருவரும் அட்சதை தூவி மணமக்களை வாழ்த்தினார்கள். பறகு மணமக்களுடன் போட்டோ எடுத்துக்கொண்டனர். திருமணம் செய்த 20 ஜோடிகளுக்கான எல்லா செலவுகளையும் ரஜினிகாந்தே ஏற்றுக்கொண்டார்.

தாலி சங்கிலி 2 பவுன், தாலி ஷி பவுன ஆகியவையும், மணமகனுக்கு 1 ஷி பவுனில் சங்கிலி, கைக்கடிகாரம், பட்டு வேட்டி, சட்டை, துண்டு வழங்கப்பட்டது.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-143

...மண்டையில கொஞ்சங் கொஞ்சமாக் கொறைஞ்சுக்கிட்டிருந்த உசுரு ஊறி வருது கெழவனுக்கு. பொறி பறக்குது நெத்தியில. நீ என்ன சொன்னாலும் சரி தாயின்னு ஆடுது தல அது பாட்டுல.

எளஞ்சூட்டு எண்ணெய இருகாதுலயும் ஊத்திப் பருத்திப்பஞ்ச வச்சு அடைச்சா; மூஞ்சியில எண்ணெய் வச்சு நெத்தி தடவுனா; இரு கட்ட விரல்லயும் இருபுருவம் நீவி விட்டா; கண்ணுல வெரல விட்டுப்பீளை பிதுக்கியெடுத்தா; தேஞ்ச கழுத்தெலும்ப எண்ணெவிட்டு வழிச்செடுத்து இழுகிவிட்டா.

சொறி புடிச்சுச் சொர சொரன்னு போன முதுகப் பிஞ்சுநகம் வச்சுச் சொரண்டிச் சுத்தப் படுத்தினா; வத்திப்போன நெஞ்சுக்கூட்ல வழிய வழிய எண்ணெ தடவி, நரைமுடி யச் சிக்கெடுத்தா.

சதையில்லாத தொடையெலும்ப அழுத்தாம அழுத்தி ஆதரவு பண்ணுனா; கெண்டக்கால் சதையப் பச்சப்புள்ள கன்னத்தப் புடிச்சு விடுற மாதிரி பதறாம நசுக்கி விட்டா; பத்துவெரல்லயும் சொகமாச் சொடக்கெடுத்தா; நகக்கண்ணுல அழுக்கெடுத்தா.

சீவராசிக கூடு கட்டிக் குடியிருக்கிற குதிக்கால் பித்த வெடிப்புல வேப்பங் கொழுந்தும் மஞ்சளும் ஆமணக்கு வித்தும் அரச்சுப் பூசுனா.

சொந்த மக மாதிரி வந்த மருமக சேவை பண்ணி விடவும் நாப்பது வருசமாத் தொலஞ்சுபோன பொழப்ப ஒரே நாள்ல பொழச்சு முடிச்சிட்டதாக் கிறுக்கு புடிச்சுப் போச்சு கெழவனுக்கு.

பொல பொல பொலன்னு தண்ணி ஒழுகுது புருவம் நரைச்ச கண்ணுல.

கரம்ப மண்ணப் போட்டுத் தேச்சுத் தலையில வெது வெதுன்னு ஊத்தி விடவும் யாரு பெத்த மகளோ நீ நல்லாருன்னு சொல்லிக் கண்ணு ரெண்டையும் இறுக்க மூடிக் கோவணத் தோட உக்காந்து கும்புடறாரு கெழவன்.



இப்படி ரெண்டு மூணு தண்ணி ஊத்திவிட்டா; பல்லுப்போன கெழவனுக்குப் பஞ்சு மாதிரி சுட்டுக் குடுத்தா ஆட்டு ஈரல. இந்த சொகத்துலயும் சோங்குலயும் சொக்கிப் போன சடையத்தேவரு எங்கிட்ட இருந்தா என்ன.. போடு இருக்கே.... பொறி கலங்கிப் போச்சு அவனுக்கு.

குலதெய்வத்த ஒரு ஓரமா ஒதுக்கி வச்சுட்டு இவளக் கும்புட ஆரம்பிச்சுட்டான.

சாயங்காலமானாச் சட்டை வேட்டி மாத்தி வெளிய கெளம்புறதும் நடுச்சாமத்துல வந்து கதவு தட்றதுமா இருந்தான் இந்தா தாயி! இத நீயே வச்சுக்கன்னு எடுத்துக் குடுத்துட்டாரு சாமி படத்துக்குப் பின்னால இருந்த சாவிய.

புருசன்காரன அவ போட்ட கட்டையன்.

ஒருநாள் வெள்ளையுஞ் சொள்ளையுமா அவன் வெளிய கெளம்ப, செத்தவடம் உள்ள வந்துட்டுப்போ மாமூன்னா.

உள்ள போனா-மோர் மொளகா சுட்டுவச்சு, முட்டை வறுத்துவச்சு, ஊறுகாயும் எடுத்துவச்சிருந்தா ஒரு ஓரமா.

உறியில துண்டாத் தொங்கவிட்டிருந்த ஈயத் தூக்கு வாளிய எடுத்தா; சும்ம பட்டையக் கெளப்புது பட்டச் சாராய வாசன.

ஒக்காரு மாமுன்னா; உக்காந்தான்.

மாமூ! கூத்துப் பாக்கிறதாயிருந்தாக் கூட்டத்தோட பாக்கணும்; குடிக் கிறதாயிருந்தா ஒத்தையில குடிக்கணும்.

ஒனக்கு என்னா சரக்கு வேணும் சொல்லு. தாண்டிக் குடிமல தாண்டிக்கூட வாங்கிட்டு வந்து தாரேன். இங் கேயே குடி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்/புதிய உயர் கல்

## யாழ்ப்பா

### 2013ஆம் ஆண்டு எமது கல்லூரியில் இருந்து

### மாணிப்பட்ட பரீட்சையில் தோற்றி



வி.தர்மிலன் யாழ்ப்பாணம். | செ.கேதாரணி நீர்வேலி. | சி.தர்சன் ஏழாலை. | ஸ்.வயூரி மூளாய். | ம.லக்சிகா நீர்வேலி. | செ.லினோஜா கொக்குவில். | பா.றெமீனா தெல்லிப்பழை. | சி.சிவசங்கர் குப்பிளான். | ட.ரஞ் கிளிநொ



நா.கயல்விழி மீசாலை. | சி.பிரமாளினி காரைநகர். | செ.கோகிலா மீசாலை. | சி.துஷானி கோண்டாவில். | இ.கிஷாயினி மல்லாகம். | சு.சகிதா சுன்னாகம். | ச.கௌதமி தெல்லிப்பழை. | ச.வினோகா உடுவில். | அ.மோக கெருடா



வா.அஞ்சனா கரவெட்டி. | இ.அபிராமி உடுப்பிட்டி. | ஜெ.ஜென்சிஅமில்டா பூநகரி. | தெ.முகுந்தினி உரும்பிராய்.

எங்கள் மதிப்புக்குரிய கல்லூரி




(445)



சி.டர்ஸ்னா கரவெட்டி. | ந.நிறோஜினி யாழ்ப்பாணம். | தே.சிவாஜினி உடுப்பிட்டி. | சி.மைதிலி கொடிகாமம். | க.கோகிலவதனி கோண்டாவில். | ந.சர்மளா கரவெட்டி. | பி.நிறோஜலா கரவெட்டி. | ச.மிதுலா ஊர்காவற்துறை. | கு.யாழ கைத



கு.மேகலா கம்பர்மலை. | சு.றஜனி நீர்வேலி. | சு.கோசலா சிறுப்பிட்டி. | ந.ஜாமினி வெள்ளிருவை. | ந.நிசாளினி பருத்தித்துறை. | மு.துர்க்கா கற்கோவளம். | இ.றஜிதா கோண்டாவில். | கி.சுகிர்தா புலோலி. | சோ.கேதீஸ்வரன் யாழ்ப்பாணம்.



ந.கோகுலவாணி நெடுந்தீவு | மே.அனிதா நாகர்கோவில். | க.ஜங்கரன் கொக்குவில். | சி.சுதாகரன் வல்வெட்டித்துறை. செயலாளர் - மாணவரொன்றியம் 2013 | க.மங்களமூர்த்தி அராலி. தலைவர் - மாணவரொன்றியம் 2013 | அ.டொமினிக்றேகன் பருத்தித்துறை. | ச.பவானி புலோலி. | ந.தீபன் திருநெல்வேலி.

புதிய உயர் கல்லூரி கல்விப்புகழ்மணம் பரப்பிடும் கல்லூரி மதியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..கல்லூரி ஆரியகுளம் ..பாணம்.

## ..இருந்து பேராதனைப் பல்கலைக் கழக கலை ..ற்றி சித்தியடைந்த பட்டதாரிகள்.



ர் | ட.ரஞ்சினி கிளிநொச்சி. | பூ.கலைச்செல்வி பரந்தன். | கு.துசியா கல்வியங்காடு. | பூ.தனச்செல்வி மானிப்பாய். | தி.செல்வஞானம் மல்லாகம். | சி.ஜெயரூபா நீர்வேலி. | செ.சோபனா புளியங்கூடல். | க.விஜிதா புளியங்கூடல்.



ா | அ.மோகன்ராஜ் கெருடாவில். | ம.ஆரணி மானிப்பாய். | து.ஜெனந்தன் புத்தூர். | க.பவித்திரா மீசாலை. | வை.கோகிலவாணி மல்லாகம். | சு.மேரிசுலோஜினி சுண்டுக்குழி. | த.சுகுணா உரும்பிராய். | தெ.ஜெயரூபி கரவெட்டி.

### ..கல்லூரி விரிவுரையாளர்கள்.





ஜெ.துஸ்ஸந்தினி மல்லாகம். | ய.தர்சிகா கொக்குவில். | ஜோ.வித்யா வரணி. | கெ.கயேந்திராஜினி பண்டத்தரிப்பு.



..ு. | கு.யாழினி கைதடி. | வ.மேனகா பொலிகண்டி. | சி.கோமதி கரவெட்டி. | செ.தர்சனா கரவெட்டி. | ப.சுஜீவா வரணி. | பொ.யாழினி நுணாவில். | கா.யாழினி அல்வாய். | த.குமுதினி உடுப்பிட்டி.



..கேதீஸ்வரன் ..ழ்ப்பாணம். | த.சுதஸ்சன் அச்சுவேலி. | சு.மனோசுதன் கரணவாய். | சி.பார்த்தீபன் சாவகச்சேரி. | இ.சிவாகரன் மருதனார்மடம். | ச.மதியுகன் மீசாலை. | ச.சசிதரன் வரணி. | ச.றஜிந்தன் அல்வாய். | பா.சிவாகரன் பண்டத்தரிப்பு.



..ந.தீபன் ..நெல்வேலி. | இ.பிரிஜா சாங்கானை. | ப.கஜிந்தா வவுனியா. | ஸ்ரீ.விதுஜன் தெல்லிப்பழை. | ப.காஞ்சன் சாவகச்சேரி. | சு.சுதர்சினி தாழையடி. | வே.கலையரசி வரணி

..மதியதையளித்திடும் கல்லூரி என்றும் மங்காப்புகழ் கொண்ட கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோக்கி பாய்தல்

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஆறு வருடங்களாகின்றது. ஏழு தசாப்த காலத்தைத் தாண்டிய தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டங்களில், மூன்று தசாப்த காலம் ஆயுதப் போராட்டத்தினால் பெரும் முனைப்புப் பெற்றிருந்தது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் மற்றும் இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்போடு இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுதப் போராட்டக் களத்திலிருந்து மே 18, 2009 இல் முற்றுமுழுதாக அகற்றியது. விடுதலைப் புலிகளின் அகற்றத்தோடு தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வந்தது.

ஆயுதப் போராட்டத்தின் முடிவு மற்றும் வெற்றி தோல்விகள் குறித்து ஆயிரத்தெட்டு முறை பேசப்பட்டுவிட்டது. பெற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து அனுபவங்களைப் பெற்று முன்னோக்கி நகர வேண்டிய கட்டத்தில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள்.

ஆனால், அடுத்த கட்டம் நோக்கி நகர்தலுக்கான தீர்க்கமான புள்ளியை தமிழ் மக்களும், அவர்களது அரசியல் தலைமைகளும் இன்னும் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

அரசியல் உரிமைப் போராட்டங்களின் வடிவங்கள் உலக அரசியல் போக்கினை உள்வாங்கி அதற்கேற்ப தன்னை மெருகேற்றிக் கொண்டு நகர வேண்டும். இல்லையென்றால், பேரழிவுகளை தந்துவிடும்.

ஆயுதப் போராட்டத்தின் முடிவு அதற்கான பெரும் சான்று. அப்படிப்பட்ட நிலையில், யதார்த்த சூழ்நிலைகளை புரிந்துகொண்டு உரிமைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அதிகமாக சிந்தித்து செயலாற்ற வேண்டிய தருணமிது. ஆனால், தமிழ்ச் சூழலில் சிந்தனை மற்றும் கருத்தியல் என்பது பெரும குழப்ப நிலைக்குள்ளேயே இருக்கின்றது. அது, போர் சிதைவு மனநிலை போன்றது.

தமிழ் மக்கள், வட மாகாண சபைத் தேர்தலில் பெருவாரியாக வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற வைத்ததில் புறக்காரணிகளின் அழுத்தங்கள் இருந்த போதும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்து ஆட்சி மாற்றத்தில் பங்களித்ததிலும் குறிப்பிடத்தக்க நகர்வுகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், இவை முன்னோக்கி பாய்வதற்கான தீர்க்கமான புள்ளி அல்ல. தமிழ் அரசியல் தலைமைகள் இவற்றை தீர்மானம் மிக்க புள்ளிகளாக காட்டிவிட்டு கரைந்துவிடப் பார்க்கின்றனர். அது, 1970 களுக்கு முந்தைய கால கட்டத்தை நோக்கி பின் நகர்வதற்கு ஒப்பா னது. இப்படியான நிலை அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தரும் என்று கருத முடியாது.

மாறாக, பெரும் விட்டுக் கொடுத்தல்களைச் செய்ய வைத்து, எமது போராட்டங்களை நீர்த்துப் போக செய்துவிடும். தமிழ் மக்களும அரசியல் தலைமை களும் இரண்டு விடயங்களில் தெளிவாக இருக்க வேண்டிய தருணம் இது.

இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் உள்ளிட்ட உள்ளக அரசியலில் தொடர்ந்தும் தீர்மானம் மிக்க சக்திகளாக வலம் வருவதுடன, உலக அரசியலை உள்வாங்கி அதனை எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது என்பது பற்றி சிந்தித்து செயலாற்றுவது.

ஏனெனில், இரண்டில் ஒன்று கைமீறிச் சென்றாலும் மீண்டும் மீண்டும் தமிழ் மக்கள் இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும். உள்ளக அரசியலில் நம்பிக்கை கொள்ள முடியாது என்று, அதனைத் தவிர்த்துவிட்டு சர்வதேசத்திடம் முழுமையாக மண்டியிடு வதோ, உலக அரசியலின் போக்கினை உணராமல் இருப்பதோ நல்லதல்ல.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை வழங்குவதற்கே, இறுதி மோதல் களில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களை சர்வதேசம் அதிகம் பயன்படுத்தியது.

அதன்மூலம் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதி கிடைத்துவிடும் என்று தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள முடியாது. அதுபோல, அவற்றை அரசியல் மாற்றங்களின் போக்கில் கையாளும் வல்லமையையும் பெற்றிருக்க வேண்டும்.

இறுதி மோதல்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான உறவுகளை நினைவு கூருவதற்கே இன்னமும் தமிழ் மக்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.



இலங்கையில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டுள்ள போதிலும், அரசு இயந்திரத்தின் போக்கில் அவ்வளவு மாறுதல்கள் ஏற்படவில்லை. அப்படி ஏற்படும் என்றும் நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. ஏனெனில், இலங்கை அரசு இயந்திரம் என்பது சிங்கள பௌத்த தேசியவாதத்தினால் கட்டமைக்கப்பட்டிரு க்கின்றது.

இன்னொரு புறம், தமிழ் பெரும் அரசியல் தலைமைகள் இளைஞர்களின் அரசியல் ஆர்வத்தை ரசிக்கவில்லையோ என்று தோன்றுகின்றது. ஏனெனில், தமிழ் அரசியல் உரிமைப் போராட்டக்களத்தின் அனைத்துக் கடிவாளங்களையும் தாமே வைததுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

அதுதான், தம்மை தொடர்ந்தும் தலைமைகளாக வைத்துக் கொள்ளும் என்று நம்புகின்றார்கள். கடந்த காலத்தில் ஆயுதப் போராட்டங்களினூடு இளைஞர்கள் கொண்ட எழுச்சி என்பது, பெரும் அரசியல் தலைமைகளை போராட்டக் களத்திலிருந்து முற்று முழுதாக அகற்றியிருந்தது. அப்படிப்பட்ட நிலையில், அவர்கள் தமது இருத்தலுக்கான அச்சுறுத்தலை மீண்டும் எதிர்கொள்ளத் தயாராக இல்லை.

இளைஞர்களைப் பொறுத்தவரை, அரசியல் மீதான ஆர்வத்தை அடிப்படையில் கொண்டிருந்தாலும் கடந்த காலங்களில் பெற்றுகொண்ட இழப்புக்களும் அது கொடுத்துள்ள வலியும் பெருமளவில் இருப்பதால் முன்னோக்கி நகர்வது தொடர்பில் தமக்குள் அதீத சந்தேகங்களைக் கொண்டிருக்கின்றார்கள்.

சந்தேகத்தை நீக்கி நம்பிக்கையளித்து அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கான வழிகாட்டிகளாக இருக்க வேண்டி பெரும் அரசியல் தலைமைகள் அச்சுறுத்தலாக உணர்ந்து விலகி நிற்கின்றனர்.

இந்த நிலைமை என்பது அடுத்த கட்டத்துக்கான நகர்வினை நிறையவே காலம் தாழ்த்தி வைத்திருக்கின்றது.

தேர்தல்களில் வாக்களிப்பு என்கிற விடயத்தை பிரதான விடயமாக கருதும் இளைஞர்கள், அரசியல் போராட்டங்களின் செயற்பாட்டுத் தளத்துக்கும் நகர வேண்டும்.

அது, வன்முறை ரீதியாக இல்லாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதற்கு, கருத்தியல் ரீதியான அரசியலுக்குள் அவர்கள் வர வேண்டும்.

கருத்தியல்- சிந்தனை ரீதியான அரசியலின் வெற்றிடம்தான் எமது தொடர் தோல்விக்கான காரணமாகவும் கொள்ளப்படக்கூடியது. தமிழ் பெரும் அரசியல் தலைமைகள் ஒற்றைப் படைச் சிந்தனையிலிருந்து பல் சிந்தனைகளைக் கொண்டவர்களை உள்வாங்க வேண்டும்.

அதுதான், தமிழ் மக்களின் அரசியல் போராட்டங்களை தொடர்ந்தும் உயிர்ப்பாக வைத்திருக்கும். மாறாக, நெகிழ்வுப் போக்கின் பக்கம் நகர்வதை மட்டும் இலக்காக்கி செயற்பட முடியாது.

ஒருமித்த இலங்கைக்குள் அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்கிற விடயத்தை பெரும்பான்மையான தமிழ் இளைஞர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். தனித்த நாடு என்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்கிற போது, அடுத்த நிலை தொடர்பில் இளைஞர்கள் சிந்திக்க மாட்டார் கள் என்றில்லை.

இலங்கையின் உள்ளக அரசியல் மாற்றங்களில் தமிழ் இளைஞர்கள் பெருவாரியாக பங்களித்ததும் அதன் போக்கில்தான்.

அப்படியில்லையென்றால், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் சில புத்திஜீவி அமைப்புக்கள் வலியுறுத்தியது போன்று தேர்தல் புறக்கணிப்புக் கோஷங்களின் பக்கம் அவர்கள் சென்றிருப்பார்கள்.

ஆயுத போராட்டத்தின் முடிவு, தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்களில் தேக்கத்தை ஏற்படுத்தியிருப்பது எவ்வளவு உண்மையோ. அதேயளவுக்கு இன்னொரு உண்மையும் இருக்கின்றது. அது, புலம்பெயர் தமிழர்களுக்கும்- புலத்திலுள்ள தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளியை பெருமளவு அதிகரித்திருக்கின்றது.

அந்த இடைவெளி கடந்த ஆறு ஆண்டுகளில் இரு வேறு சமூகங்களின் கூறுகள் போன்று சிந்திக்கும் நிலைக்கு நகர்ந்துவிட்டது. புலம்பெயர்வு என்பது சமூகமொன்றின் வாழ்வியலை மட்டுமல்ல பாரம்பரியம் உள்ளிட்ட அடிப்படைக் காரணிகளையே அகற்றிவிடும் என்பது உலக வரலாறுதான். அதன் அண்மைக்கால உதாரணமாக, ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்துள்ளவர்களையும் சொல்ல முடியும். ஆனால், அதை குறையாக கொள்ள வேண்டியதில்லை. ஆனால், அரசியல் போராட்டங்கள் சார்பிலான முடிவுகளை புலத்திலுள்ளவர்கள் மீது புலம்பெயர்ந்துள்ளவர்கள் திணிக்கும் போது, அது வேறு மாதிரியான வடிவங்களை எடுத்து இடைவெளியின் அளவை அதிகரித்து விடுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புத்திஜீவிகளில் அதிகமானோரின் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை உள்ளூர் புத்தஜீவி அமைப்புக்கள், கட்சிகள், முக்கியஸ்தர்கள் சிலரும் பிரதிபலித்தார்களா.

ஆனால், சாதாரண தமிழ் மகன் இவர்களைக் கண்டுகொள்ளவில்லை. இந்த நிலைமையும்கூட அரசியல் போராட்டங் கள் அச்சுறுத்தலான நிலையை நோக்கி செல்வதற்கான தருணங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

புலம்பெயர்ந்தவர்களும் அவர்களின் புத்திஜீவிகளும் அடிப்படையில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் புலத்திலுள்ள (இங்குள்ள) தமிழ் மக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டே அடுத்த கட்டம் நகர வேண்டியிருக்கின்றது. ஆனால், அந்தப் புள்ளியை புரிந்து கொள்வதில் தொடர் சிக்கல் இருக்கின்றது என்பதை கடந்த கால நடவடிக்கைகள் காட்டி நிற்கின்றன.

ஆயுதப் போராட்டத்தின் முடிவுக்குப் பின்னரான தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்கள் தொடர்பிலான பார்வை- கருத்தியல் கொழும்பு, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு என்கிற பிராந்தியங்களாக பிரிந்து நிற்கின்றது.

புலத்துக்குள்ளேயே புரிதலிலும் சிந்தனையிலும் இவ்வளவு சிக்கல்கள் இருக்கின்ற நிலையில், நிலத் தொடர்புகள் அற்று பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கின்றவர்களுடனான கருத்தியல் வேறுபாடு இயல்பானதுதான்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டங்கள் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதை மட்டுமே இப்போது இலக்காக்கிக் கொண்டிருக்க முடியாது. மாறாக, இழக்கப்பட்டுவரும் கல்வி, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும். ஆயுதப் போராட்டங்களின் கோலொச் சுகை தமிழ் மக்களின் பொருளாதாரம், கல்வி எனும் பெரும் சொத்துக்களை குறிப்பிட்டளவில் அழித்துவிட்டது. அதனை மீண்டும் கட்டியெழுப்புவது தொடரபிலான அக்கறையை புலத்திலுள்ளவர்களும் புலம் பெயர்ந்துள்ளவர்களும் கொளள வேண்டும.

மோதல்கள் முடிவுக்கு வந்து ஆறு வருடங்கள் நிறைவடைந்துவிட்ட போதிலும் மீள் எழுச்சி தொடர்பில் நாம் சிந்தித்தாலும், செயற்பாட்டளவில் தொடர்ந்தும் பின்னோக்கியே இருக்கின்றோம்.

"அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களின்போது இழப்பு சகஜமானதுதான்" எனும் கருத்தியல் தமிழ் மக்களிடையே பலமாக இருக்கின்றது. ஆனால், அந்த இழப்புக்கள் இனமொன்றின் அடிப்படையையே ஆட்டம் காண செய்யும் அளவுக்கு இருக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்களில் பங்கெடுத்தும்-- அதற்குள் சிக்கியும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். அவர்களை மனதார நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவது பெரும் கடமை. அந்தக் கடமையை ஒவ்வொரு தமிழனும் செய்ய வேண்டும்.

அதேபோல, எந்தவித தொய்வுமின்றி அரசியல் உரிமைகள், அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டங்களின் அடுத்த கட்டம் நோக்கி முன்னோக்கி பாயவும் வேண்டும். அதுதான், இழக்கப்பட்ட உயிர்களுக்கு நாம் செலுத்தும் பெரும் காணிக்கையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 இன் கீழ் அரசியலமைப்புச் சபை இம்மாதத்துக்குள் அமைக்கப்படும்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் கீழ் அரசியல் அமைப்பு சபை விரைவில் அமைக்கப்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இதன் கீழ் சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு நியமனங்களும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு சபையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் உட்பட 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மூன்று சுயாதீன உறுப்பினர்களும் உள்ளடங்குவர்.

இந்தநிலையில் இந்தமாத இறுதிக்குள் அரசியலமைப்பு சபை ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



# போர் வெற்றிக் கொண்டாட்டங்களின் ஊடாக விடுதலைப்புலிகளின் மனங்களே காயப்படும்

## விமல் வீரவன்ச கண்டுபிடிப்பு

போர் வெற்றிக் கொண்டாட்டங்களினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் மனங்களே காயப்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வடக்கில் போர் வெற்றி கொள்ளப்பட்டு ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

இன்று அரசாங்க ஊடகங்கள் போர் வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்தக் கூடாது என செய்தி வெளியிடுகின்றன.

இவ்வாறு கொண்டாடுவதனால் ஒரு தரப்பின் மனங்கள் காயப்படும் என குறிப்பிடுகின்றனர்.

யாருடைய மனங்களும் காயப்படாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இதயங்களே போர்வெற்றிக் கொண்டாட்டங்களினால் காயப்படும். பெரும்பான்மை தமிழ் மக்கள் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதனை விரும்புகின்றார்கள்.

போருக்கு சென்று இன்று கல்லறைகளில் உறங்கிக் கொண்டிருக்கும் எங்கள் பிள்ளைகள் எங்களை சபிக்கின்றார்கள்.

முதுகெலும்பு இல்லாத தரப்புக்கள் இந்த அரசாங்கத்தை நடத்துகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இந்த அரசாங்கத்தை வழிநடத்துகின்றது.ஒரேவிதமான எண்ணங்கள் உடையவர்கள் இன்று ஒன்று கூடியுள்ளனர்.

உரிய முறையில் சிந்திக்கா விட்டால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது.

மைத்திரி யுகத்தின் நடவடிக்கைகளை மக்கள் கண்கூடாக பார்க்க முடிகின்றது.

அவ்வாறு தெரியாவிட்டால் அவர்கள் குருடர்களாகவே இருக்க வேண்டுமென விமல் வீரவன்ச தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# நீதிமன்றத்தில் பகிரங்கப்படுத்தப்பட்ட வெலேசுதா மீதான குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

பாரிய அளவிலான ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சமந்த குமார எனப்படும் வெலே சுதா தொடர்பான குற்றப்பத்திரிகை நேற்று முன்தினம் பகிரங்கமாக நீதிமன்றில் வாசிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜராங்கனி பெரேரா முன்னிலையில் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டதுடன் வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேகநபரை குற்றப் புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, 2010 கல்கிஸ்ஸ பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் வெலே சுதா மீதான மற்றுமொரு வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஜயசூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை தொடர்பான ஆவணம் காணாமல் போயுள்ளமை குறித்து கல்கிஸ்ஸ வலய பொலிஸ் பொறுப்பதிகாரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

அதன்படி வழக்கு விசாரணையை முன்னெடுத்துச் செல்வதா? இல்லையா என நீதிமன்றம் எதிர்வரும் ஜூலை 16ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அரச சட்டத்தரணியிடம் கோரப்பட்டுள்ளது. (இ-5)

# FCID பிரிவை உருவாக்கியவர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

பொலிஸ் நிதி மோசடி பிரிவை ஏற்படுத்தியவர்கள் எதிர்காலத்தில் தாம் ஆட்சிக்கு வந்தபின் அதற்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸ் நிதி மோசடி பிரிவு (FCID) மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ குறித்து இந்த ஊடக வியலாளர் சந்திப்பில் சுசில் பிரேம ஜயந்த. நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கருத்து வெளியிட்டனர்.

FCID தொடர்பில் பிரதமர் மீது மாத்திரம் ஏன் குற்றம் சுமத் தப்படுகிறது ஜனாதிபதிக்கு தொடர்பு இல்லையா என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஜனாதிபதி சில விடயங்களை அறிந்துள்ளதாகவும் ஆனால் FCID தொடர்பில் தமக்கு வாக்குறுதி அளித்துள்ளதாகவும் பதில் அளித்துள்ளனர்.

கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பான வழக்கு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுநலவாய அமைப்பின் உதவியை கோருவது அநாவசியமானது என்றும் அது இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பை தரம்குறைத்து சட்டத்தரணிகளை [illegible] பாடு என அவர்கள் [illegible] தெரிவித்துள்ளனர். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பிரச்சினைகளின் பரிமாணங்களைப் புரிந்து கொள்வோம்

வாழ்க்கையின் முதன்மையான இடத்தைப் பெற விரும்புகிறவர்கள் சந்தர்ப்பங்களை மட்டும் வைத்துக்கொண்டு முடிவெடுக்கும் மனோபாவத்திலிருந்து விடுபட வேண்டும். இப்போது இருக்கிற படிதான் நிலைமை எப்போதுமே இருக்கும் என்கிற மனோபாவத்தில் முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது. சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் மாறிக் கொண்டேதான் இருக்கும். இது இயற்கையின் நியதி.

சிலர் இருக்கிறார்கள். எதிர்பாராமல் சிறு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டால்கூட தங்களை மிகவும் அலட்டிக் கொள்வார்கள். திடீரென்று வீட்டு மின்சாரம் நின்று போனால் போதும். ஏதோ நடக்காதது நடந்து விட்டதுபோல அங்குமிங்கும் ஓடுவார்கள். அவர்கள் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டால் அவர்களுக்கு உடனே தலைவலி வந்து விடும். அவர்கள் மாலை சிற்றுண்டி அருந்தச் செல்லும் உணவு விடுதி ஒருநாள் மூடப்படுமேயானால் அன்று ஏதோ பெரிய விபத்து ஏற்பட்டு விட்டதைப் போல அலட்டு வார்கள். இதெல்லாம் வாழ்க்கையில் சாதாரணமாக ஏற்படக்கூடிய மாற்றங்கள் என்கிற எண்ணம் அவர்களுக்கு வராது.

எதிர்பாராத நிசிகழ்சிகளுக்கும் மாற்றங்களும் எவன் ஒருவன் தயாராக இருக்கிறானோ அவனே வாழ்க்கையில் முதன்மையான இடத்தைப் பெறும் முதல் தகுதி பெற்றவனாகிறான். எல்லாவற் றையும் வெற்றி கொள்ள முடியாது என்பது எவ்வளவு உண்மையோ அது போலவே எல்லாவற்றையும் இழக்க வேண்டிய அவசிய மில்லை என்பதும் ஓர் உண்மையாகும்.

தென்னாபிரிக்காவில் பல்லாயிரக்கணக்கான பேர் சுரங்கங்களைத் தோண்டி வைரத்தை வெட்டி எடுக்கிறார்கள். பல தொன் எடையுள்ள மண்ணை தோண்டி அப்புறப்படுத்தினால் தான் ஒரு சிறு துண்டு வைரம் கிடைக்கிறது. வைரத்தை விட மண்தான் அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் சோர்வடைய முடியாது. மண்ணைத் தேடி அவர்கள் தோண்டவில்லை. வைரத்தைத் தேடித்தான் தோண் டுகிறார்கள். வாழ்க்கையில் எதிர்மறைகளை எண்ணித் தோண் டிக்கொண்டிருக்க முடியாது. மதிப்புக்குரியதைத்தான் தோண்டி எடுக்க வேண்டும்.

ஒரு பொருளுக்குக் குறிப்பிட்ட விலை கொடுக்கத் தகுதியான முடிவுக்கு வந்து விட்டால் எப்பாடுபட்டாவது அந்த விலையைக் கொடுத்து அந்த பொருளை பெற்றுவிடும் மனவுறுதி வேண்டும். நம்மில் பலர் மகிழ்ச்சிக்குரிய நீண்ட கால திட்டங்களை பற்றிச் சிந்திப்பதில்லை. உடனடியாக மகிழ்ச்சி தரும் காரியங்களுக்காக ஒட்டுவேலை செய்து கொண்டே போகிறோம். இதனால் நீடித்த மகிழ்ச்சியை நம்மால் பெற முடியாமல் போகிறது.

மகிழ்ச்சியை தவணையில் வாங்க நாம் ஒருபோதும் முயற்சி செய்யக்கூடாது. ஒவ்வொரு பிரச்சினையின் சரியான பரிமாணம் என்னவென்று நாம் கணிக்கத்தொடங்கிவிட்டால், பிரச்சினைகள் ஒருபோதும் நம்மை அச்சுறுத்தாது

**பிரச்சினைகளின் பரிமாணங்களை சரியாக கணித்து கொள்ளும் போது அதற்குத் தீர்வு காண்பதும் எளிதாகி விடுகிறது.**

சில சமயங்களில் சாதாரண பிரச்சினைகள்கூட பெரிதாக தோன்றும். மற்றவர்கள் பிரச்சினைகளுடன்கூட அதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நம்முடைய பிரச்சினையின் உண்மையான பரிணா மம் நமக்கு புரியத் தொடங்கும். ஏதோ ஒரு நாள் வயிற்று வலியால் நாம் அவதிப்பட்டு உணவு அருந்த முடியாமல் போனால் அது ஒருபெரிய பிரச்சினை போல் நமக்குத் தோன்றும். இலட்சாதிபதி ஒருவர் நீரிழிவு நோயின் காரணமாக என்றைக்குமே நல்ல உணவு சாப்பிட முடியாத நிலையில் இருக்கிறார் .அவர் பிரச்சினைகளோடு உங்கள் பிரச்சினையை ஒப்பிட்டு பார்த்துக் கொண்டால் இது உங்களுக்கு சாதாரணமாகத் தோன்ற ஆரம்பித்து விடும்.

கற்பனைகள் ஒருபோதும் நிஜமாவதில்லை என்கிற தெளிவு நமக்கு ஏற்பட்டு விட்டால் ஏமாற்றங்கள் நம்மை அணுகாது.

ஆகவே உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்களாகவே கற்பனை செய்து கொண்டு தடுமாற்றத்துக்கு ஆளாகாதீர்கள். உலகம் எப்படி இருக்கிறது என்று புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களுடைய நடைமுறைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். உலகத்தின் தன்மை அறிந்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ளத் தெரியாதவன் எவ்வளவு கற்றவனாக இருந்தாலும் அறிவில் லாதவன் என்கிறார் திருவள்ளுவர்.

நெருப்புக் கோழியைப் பற்றி ஒரு கதை சொல்வார்கள். ஆபத்து வரும்போது அது தன்னுடைய தலையை மண்ணில் புதைத்துக்கொண்டு விடுமாம். அப்படிச் செய்தவுடன் தனக்கு வந்த ஆபத்து நீங்கி விட்டதாக அதற்கு ஒரு பிரம்மை. பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு பூலோகம் இருண்டு விட்டதாக எண்ணிக் கொள்ளுமாம். நெருப்புக் கோழியின் மனப்பான்மையுடனும் பூனையின் மனப்பான்மையுடனும் உள்ள மனிதர்களால் பிரச்சினைகளின் உண்மையான பரிமாணத்தை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த உருவாக்கிய இராணுவ பாதுகாப்புப் பிரிவு கலைக்கப்பட்டது ஏன்?



வழமையாக, புதிய ஜனாதிபதி ஒருவர் பொறுப்பேற்கும் போது முன்னாள் ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர்களுக்குப் பதிலாக தனக்கு விசுவாசமானவர்களை நியமிப்பது வழமையாகும். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடைமுறைக்கு எதிராகச் செயற்பட்டிருந்தார்.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில், கிகான் கமலேஸ் வீரசிங்க எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் உருவாக்கப்பட்ட, இராணுவத்தின் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு ஏப்ரல் 30 ஆம் திகதி அமுலுக்கு வரும் விதமாக நிரந்தரமாக அகற்றப்பட்டுள்ளது. நிர்வாக நோக்கம் கருதி இப்பிரிவு நிரந்தரமாக அகற்றப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயந்த் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புச் பிரிவுத் தலைவரான கேணல் மகேந்திர பெர்னாண்டோ இராணுவ சிறப்புப் புலனாய்வுப் பிரிவினராலும் குற்றப் புலனாய்வுப் பிரிவாலும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அங்குனகொலபெலஸ்ஸவில் இராணுவக் கோப்ரல் ஒருவர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்காகவே கேணல் மகேந்திர பெர்னாண்டோ விசாரணை செய்யப்பட்டார்.

சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சி சந்திப்பில் கலந்து கொண்டபோது அவருக்கு அருகில் துப்பாக்கியை ஏந்தியவாறு இராணுவக் கோப்ரல் ஒருவர் நெருங்கிய சம்பவம் தொடர்பில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஜனாதிபதி பாதுகாப்பிற்கான இராணுவப் பிரிவானது சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் அனைவருக்கும் பாதுகாப்பை வழங்கவில்லை. சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மற்றும் சிறப்புக் காவற்துறை அதிரடிப்படை ஆகியவற்றின் பெயரில் காவற்துறைப் பாதுகாப்பு மட்டும் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவிக்கு வந்தபோது, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலிருந்த காவற்துறை சிறப்பு அதிரடிப் படையினரை அகற்றினார். இதற்குப் பதிலாக இராணுவ வீரர்கள் இணைக்கப்பட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் அவரது மகனான ரவி ஜெயவர்த்தனவின் ஆலோசனையின் பேரில், ஐக்கிய தேசியக் கட்சியின் துணை ஆயுதப்படையாக, சிறப்பு அதிரடிப் படை உருவாக்கப்பட்டதன் காரணமாகவே சந்திரிகா தனது காலத்தில் சிறப்பு அதிரடிப் படையை அகற்றி அதற்குப் பதிலாக இராணுவ வீரர்களை நியமித்திருந்தார்.

சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்ட சிறப்பு அதிரடிப் படையினர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பாதுகாப்பிற்காக முதல் வரிசையில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தொடர்ந்து ஜனாதிபதிகளான பிறேமதாச மற்றும் டி.பி.விஜேயதுங்க ஆகியவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பாளர்களாகச் செயற்பட்டனர்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சிறப்பு அதிரடிப் படையினரின் பாதுகாப்புத் தொடர்பில் திருப்தி ஏற்படவில்லை. இதனால் இவர் ஜனாதிபதி செயலகப் பாதுகாப்புப் பிரிவை உருவாக்கினார். மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதிலிருந்தே தனக்கான பாதுகாப்பை வழங்கிய ஜனாதிபதி செயலகப் பாதுகாப்புப் பிரிவின் மீது தான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

மகிந்த அரசாங்கம் இப்பிரிவை தரமுயர்த்தியதுடன், இதற்குள் இராணுவப் பிரிவையும் இணைத்து ஜனாதிபதி செயலகப் பாதுகாப்புப் படை எனப் பெயர் மாற்றம் செய்தது. சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், சிறப்பு அதிரடிப் படை மற்றும் அலரி மாளிகைளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட இராணுவத்தை நம்பினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சில தாக்குதல் முயற்சிகளிலிருந்து இராணுவத்தினர் தன்னைக் காப்பாற்றினர் என்பதால் தனது பாதுகாப்புப் பிரிவில் மைத்திரிபால சிறிசேன அதிகம நம்பிக்கை கொண்டிருந்தார். இறுதியாக, ஏப்ரல் 30 ஆம் திகதி அமுலுக்கு வரும் விதமாக ஜனாதிபதி செயலகப் பாதுகாப்புப் படை அகற்றப்பட்டுள்ளது.

இராணுவத்தின் வரலாற்றில் இப்பிரிவானது மிகவும் குறுகிய காலம் வரை மட்டுமே செயலாற்றியுள்ளது. இப்பிரிவு கலைக்கப்பட்டதானது ஜனாதிபதியின் பாதுகாப்பில் எவ்வித பாதிப்பையும் செலுத்தாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயந்த் ஜெயவீர குறிப்பிட்டுள்ளார். இப்பிரிவு கலைக்கப்பட்ட போதிலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குப் பாதுகாப்பை வழங்குகின்ற இராணுவத்தினர் முன்னாள் ஜனாதிபதிக்கான பாதுகாப்புப் பிரிவு என்ற புதிய பிரிவின் கீழ் மாற்றப்பட்டுள்ளனர். இப்புதிய பிரிவின் தலைவராக கேணல் மகேந்திரா பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதிக்கான பாதுகாப்பானது முற்றிலும் மீள் வடிவமைக்கப்பட்டுள்ளமைக்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் மீதான சந்தேக நடவடிக்கையே காரணமாகும். குறித்த பாதுகாப்பு இராணுவ வீரர் துப்பாக்கியுடன் சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நெருங்கிய சம்பவமானது சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. நாட்டின் முதலாவது குடிமகனின் பாதுகாப்பை மீறியமைக்காக ஜனாதிபதி செயலகப் பாதுகாப்புப் பிரிவு மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரமானது அரசியல் மற்றும் ஊடக வட்டாரங்களில் அதிகம் பேசப்படுகிறது. சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்ட மாநாடு ஏப்ரல் 25 அன்று அங்குனகொல பெலஸ்ஸவில் இடம்பெற்ற போதேஜனாதிபதியின் பாதுகாப்புப் பொறிமுறை மீறப்பட்ட சம்பவம் இடம்பெற்றது.

தாடி வளர்த்திருந்த பாதுகாப்பு வீரர் ஒருவர் ஜனாதிபதியை நோக்கி நெருங்கிய வேளையில் காவற்துறை வீரர் ஒருவருக்கு குறித்த வீரரின் நடவடிக்கை மீது சந்தேகம் ஏற்பட்டது. குறித்த சந்தேக வீரரின் இடுப்பில் சந்தேகத்திற்குரிய பொருள் ஒன்று உள்ளதை காவற்துறை வீரர் அவதானித்தார். இதன் பின்னர் சந்தேகத்திற்குரிய இராணுவக் கோப்ரல் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது. இவர் தன்னை நாமல் ராஜபக்சவின் தனிப்பட்ட பாதுகாப்பு வீரர் என அறிமுகப்படுத்தினார். இவர் இராணுவ கொமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த கோப்ரல் எனவும் கூறினார்.

அம்பாந்தோட்டை கருத்தரங்கில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த காவற்துறை அதிகாரி குறித்த சந்தேக நபரின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டிருந்ததாலேயே குறித்த வீரர் கைது செய்யப்பட்டு இவர் வைத்திருந்த கைத்துப்பாக்கியும் மீட்டெடுக்கப்பட்டது. இவர் எவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிரதேசத்திற்குள் அனுமதியின்றி உள்நுழைந்தார் என்பது விசாரணை செய்யப்பட்டது.

அம்பாந்தோட்டையில் சிறிலங்கா ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி, சபாநாயகர், அமைச்சர்கள் பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக அறிந்திருக்கவில்லை. இந்த நிகழ்வு முடிவடைந்த பின்னரே, சந்தேக நபரைக் கைது செய்த சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த வீரர், இது தொடர்பாக தனது மூத்த உதவிக் காவற்துறை மா அதிபரான றோய் சுமணவர்தனவிடம் இச்சம்பவத்தைத் தெரியப்படுத்தினார்.

கருத்தரங்கு இடம்பெற்ற அன்றைய தினம் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிற்குப் பொறுப்பாக இருந்த மூத்த காவற்துறை அத்தியட்சகரான எம்.டி.ஆர்.எஸ்.தமிந்தவிடம் உதவிக் காவற்துறை மா அதிபர் சுமணவர்த்தன கைதுச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்தார். அதுவரை இந்த விடயம் தொடர்பாக காவற்துறை அத்தியட்சகரான தமிந்தவுக்கு எதுவும் தெரியாது. இது தொடர்பாக அவரின் கீழ் பணிபுரிந்த அதிகாரிகள் தமிந்தவுக்கு கைதுச் சம்பவம் தொடர்பாக அறிவிக்கவில்லை.

கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களை சோதனை செய்யும் பொறுப்பு காவற்துறை உதவி அத்தியட்சகர் எம்.எஸ்.பி.மல்வலவிடம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இவருக்குக் கூட இந்த விடயம் தொடர்பாக எதுவும் தெரியாது. கடமையில் ஈடுபட்டிருந்த எந்தவொரு காவற்துறை அதிகாரிகளும் இது தொடர்பாக இவருக்கு அறியப்படுத்தவில்லை. இறுதியாக, குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட காவற்துறை அதிகாரி அடையாளங் காணப்பட்டார்.

இவர் இது தொடர்பாக தனது மூத்த அதிகாரிகள் எவருக்கும் தெரியப்படுத்தவில்லை. சந்தேகிக்கப்பட்ட நபர் தான் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் எனத் தன்னை அடையாளங் காண்பித்ததால் அவர் அங்கிருந்து அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார். சிறிலங்கா ஜனாதிபதி கலந்து கொள்கின்ற நிகழ்விற்கு பிரதமர்கூடத் தனது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியை நிராயுதபாணியாகவே கூட்டிச் செல்ல முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் மெய்ப்பாதுகாவலர் எனத் தன்னை அடையாளப்படுத்திய ஒருவர் தனது கைத்துப்பாக்கியுடன் சிறிலங்கா ஜனாதிபதி கலந்து கொண்டிருந்த கருத்தரங்கில் உள்நுழைந்தமை தொடர்பாக காவற்துறை மா அதிபரின் உடனடிக் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தனிப்பட்ட 15 பேரிடம் விசாரணை மேற்கொண்ட போதிலும் நாமல் ராஜபக்சவிடம் எவ்வித விசாரணையையும் மேற்கொள்ளவில்லை. எனினும், துப்பாக்கி வைத்திருந்தவாறு ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட சந்தேக நபர் தனது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி அல்ல எனவும் ஆனால் இவர் தன்னுடன் வந்திருந்தார் எனவும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இவர் தண்ணீர்ப் போத்தல் ஒன்றை வைத்திருந்ததாகவும் நாமல் தெரிவித்துள்ளார். எனினும், சந்தேக நபர் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்ததாக காவற்துறை ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். இவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவராவார்.

வி.ஐ.பி நுழைவாயிலின் ஊடாக கருத்தரங்கு மண்டபத்திற்குள் உள்நுழையாத நாமல் ராஜபக்ச, பொது நுழைவாயிலின் ஊடாகவே உள்நுழைந்தார் என்றும் இவர் குறித்த சந்தேக நபரைத் தனது மெய்ப் பாதுகாவலர் எனவும் அறிமுகப்படுத்தியிருந்ததாக விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இதன் பின்னர், பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் நாமல் ராஜபக்சவையும் அவரது மெய்ப்பாதுகாவலரையும் எவ்வித சோதனைகளுக்கும் உட்படுத்தாது கருத்தரங்கு இடம்பெற்ற மண்டபத்திற்குள் செல்வதற்கு அனுமதித்திருந்தனர். பிரதமரின் மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட ஆயுதம் தரித்த எவரும் குறிப்பிட்ட ஒரு எல்லைக்கு அப்பால் உள்நுழைய முடியாது. அத்துடன் சிறிலங்கா ஜனாதிபதியை நெருங்கவும் முடியாது. வேறெந்தத் தனிப்பட்டவர்களும் இப்பாதுகாப்புப் பொறிமுறையுடன் சவால் விட முடியாது. ஜனாதிபதியின் பாதுகாப்பு மீறப்பட்டதானது மிகவும் மோசமான தவறாகும்.

வழமையாக, புதிய ஜனாதிபதி ஒருவர் பொறுப்பேற்கும் போது முன்னாள் அதிபரின் மெய்ப்பாதுகாவலர்களுக்குப் பதிலாக தனக்கு விசுவாசமானவர்களை நியமிப்பது வழமையாகும். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடைமுறைக்கு எதிராகச் செயற்பட்டிருந்தார். அதாவது இவர் முன்னாள் அதிபரால் நியமிக்கப்பட்டிருந்த மெய்ப்பாதுகாவலர்களை அகற்றவுமில்லை. தனக்கான புதிய பாதுகாவலர்களை நியமிக்கவுமில்லை.

இந்த ஆபத்தான சம்பவமானது இவ்வாறான ஒரு தவறிலிருந்தே தோன்றியிருக்கலாம். இத்தவறானது ஜனாதிபதிக்கான பாதுகாப்புப் பிரிவை அகற்ற வேண்டும் என்கின்ற தீர்மானத்தை எடுப்பதற்கு வழி வகுத்துள்ளது.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் போராட்டமும் தொடர்கிறது































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபையினது அனுமதியின்றி மண்டைதீவில் பாரிய உல்லாச விடுதி

## கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க வேண்டாம் என வடக்கு சுற்றாடல் அமைச்சர் அறிவுறுத்து

(கொழும்பு)

**மண்டைதீவில் 37 மாடிகளைக் கொண்ட பாரிய உல்லாச விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக நிலத்தை சமன் செய்யும் பணிகள் ஆரம்பித்திருக்கும் நிலையில், அவற்றை இடைநிறுத்தியுள்ள வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அனுமதி இல்லாமல் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க வேண்டாம் எனவும் உரிய தரப்பினரிடம் அறிவுறுத்தியுள்ளார்.**

மண்டைதீவு எட்டாம் வட்டாரத்தில் கடற்கரைக்கு அண்மையாக 25 ஹெக்டெயர் அரச காணியில் அல் அம்மான் குழுமம் என்னும் பன்னாட்டு நிறுவனம் 37 அடுக்கு மாடிகளில் பாரிய உல்லாச விடுதியொன்றை நிறுவுவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. கடந்த சில தினங்களாக கனரக இயந்திரங்களின் மூலம் நிலத்தைத் துப்புரவு செய்து சமப்படுத்தும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக பிரதேச வாசிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் தெரிவித்ததையடுத்து இருவரும் நேற்று செவ்வாய்க்கிழமை அப்பகுதிக்குச் சென்றிருந்தனர். இதன்போதே, அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அல் அம்மான் நிறுவனத்தின் மேற்பார்வையாளராக பணியில் இருந்த அன்வர் உசேனிடம் நிலத்தை சமன் செய்யும் பணிகளைத் தொடர வேண்டாம் எனவும் உரிய அனுமதி இல்லாமல் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அமைச்சர் ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,

வடக்கின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு வடக்கு மாகாண சபை ஒருபோதும தடையாக இராது. ஆனால், சுற்றுலாத்துறை எமது மக்களின் பண்பாட்டுச் சூழலுக்கும், இயற்கைச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்கிறோம். மண்டைதீவில் அமைக்கப்பட இருக்கும் 37 மாடிகளையும் நிலத்தடியிலுள்ள சுண்ணாம்புப்பாறை தாங்குமா என்பது குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும். இந்தச் சுற்றுலா விடுதிக்கு இதுவரையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் இருந்து அனுமதி பெறப்படவில்லை. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடக்குக்கான பணிப்பாளரிடம் இது தொடர்பாக நான் கேட்டபோது, இவ்வாறான ஒரு விடுதி கட்டப்படுவது பற்றியே அவர் தெரிந்திருக்கவில்லை. அதுமாத்திரம் அல்ல, மாகாண சபைக்கும் இது தொடர்பாக எதுவுமே தெரியாது. அரச காணியாக இருந்தாலும் அதனை ஒரு நிறுவனத்துக்கு வழங்குவதற்கு மாகாணத்தின் காணி அமைச்சர் என்ற வகையில் எமது முதலமைச்சரிடமும் ஒப்புதல் பெறப்பட வேண்டும். ஆனால், இந்த அனுமதிகள் எதுவும் இல்லாமலேயே நிலத்தில் உல்லாச விடுதியை அமைப்பதற்கான பணிகள் அல் அம்மான் குழுவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவை போன்ற விதிமுறை மீறல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 60 | 70-80 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 60 | 40 | 40 |
| தக்காளி | 100 | 100 | 80 | 70-80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 70 | 80 | 60 | 60 |
| கரட் | 140 | 120 | 140 | 100-140 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 50 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 50-100 | 90 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 140 | 120 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 160 | 50 | 80 | 60-80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | — | 120 | — | 70 |
| பயற்றங்காய் | 160 | 120 | 80 | 160 | 140 |
| லீக்ஸ் | 200 | 150 | 200 | 140-160 | 160 |
| பீற்றூட் | 100 | — | 80 | 60 | 50 |
| கறிமிளகாய் | 80 | 80 | 120 | 50 | 70 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 400 | 250-400 | 400 |
| போஞ்சி | 200 | 140 | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 40 | — | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 40 | 30-50 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 160 | 180 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 130 | 150 | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 70 | — | 60 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 25 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 376

Search for people, places and things Nagendram Home

நளா நளாயினி

நல்லவனாய் இரு.ஆனால்
அதை நிரூபிக்க முயற்சி
செய்யாதே.அதை விட
முட்டாள்தனமான
விடயம் எதுவுமில்லை.

கமலநாதன் மணியம்





துவா கணேசராசா




சுரேஸ் லோகன்




கீர்த்தி கீர்த்திகா




தர்சிகா நேசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியின் கொலைக்கு நீதிகோரி கிளிநொச்சியில் நேற்று போராட்டம்

**(கிளிநொச்சி)**

**புங்குடுதீவு. பாடசாலை மாணவி ஒருவர் கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்குமாறு கோரியும் குற்றவாளிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாகக் கூடாது என்று வலியுறுத்தியும் நேற்றுக்காலை 9 மணியளவில் கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்களின் ஏற்பாட்டில் மாபெரும் கண்டனப் போராட்டம் நடத்தப்பட்டது.**



கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு முன்பாக ஆரம்பமாகிய பேரணி ஏ-9 வீதியூடாக நகர்ந்து கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்தை சென்றடைந்தது.

இப்பேரணியில்கிளிநொச்சிபொதுச்சந்தைவர்த்தகர்களுடன்பஸ்நிலைய வர்த்தகர்கள், பஸ் நிலைய முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், தனியார் பஸ் நிலைய வர்த்தகர்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பலதரப்பினர் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கண்டனப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள்;

''அழிக்காதே! அழிக்காதே! மாணவர் சமூகத்தை அழிக்காதே!, இன்றைய தீர்ப்பு மாணவர்களின் பலமான பாதுகாப்பு; தடுப்போம் தடுப்போம் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுப்போம்; அரசே! பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து; ஒன்றுபடுவோம் ஒன்றுபடுவோம் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக ஒன்றுபடுவோம்;"

ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கான மகஜரினை கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்த சில்வாவிடம் கிளிநொச்சி வர்த்தகர் ஒருவரினால் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சருக்கான பிரதி கிளிநொச்சி மாவட்ட தமிழரசு கட்சியின் உப-தலைவர் பொன்காந்தனிடமும் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரனுக்கான பிரதி கரைச்சி பிரதேச சபை உப தலைவர் வை.நகுலேஸ்வரனிடமும் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கான பிரதி கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் மா.சுகந்தனிடமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவிற்கான பிரதி தமிழரசு கட்சியின் மத்திய சபை உறுப்பினர் க.ஜெயகுமாரிடமும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கான பிரதி கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் இ.குமாரசிங்கத்திடமும் கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திற்கான பிரதி கரைச்சி பிரதேசசபை செயலாளர் இ.கிருஷ்ணகுமாரிடமும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் பிரதி கிளிநொச்சி வர்த்தகர் இ.புவனேஸ்வரனிடமும் கையளிக்கப்பட்டன.





வழங்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கொடூரமாக கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் 18 வயதுடைய புங்குடுதீவு மாணவி. கடந்த 2015. 05.13ஆம் திகதி பாடசாலைக்கு புறப்பட்டுச் சென்றிருந்த நிலையில் காணாமல் போயிருந்தார். பின்னர் பாடசாலை செல்லும் வழியிலுள்ள பாழடைந்த வீட்டின் பின்புறமாகப் பற்றைக்குள் இருந்து கைகள், கால்கள் கட்டப்பட்டு வாயில் துணி திணிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் மிக மோசமான கொடூரமான கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமையை உடற்கூற்றுப் பரிசோதனை உறுதிப்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் இது போன்ற பாலியல் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே இருப்பதனால் பாடசாலை மாணவிகளின் வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது.

எனவே புங்குடுதீவு மாணவியின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என்றும் குறித்த சம்பவத்தின் குற்றவாளிகள் சார்பாக எந்த சட்டத்தரணிகளும் முன்னிலை ஆகக்கூடாது என்று வலியுறுத்தியும் காலதாமதம் இன்றி உடனடியாக குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்றும் கிளிநொச்சி வர்த்தக சமூகம் சார்பாக இந்த மகஜரினை தங்களிற்கு அனுப்பி வைக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-271)




## வடக்கு மாகாண பாடசாலை
## மாணவர்களுக்கிடையில் நடைபெறவுள்ள
# மாகாணமட்டத் தமிழ்த்தினப் போட்டி

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்டு, வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள மாகாணமட்ட தமிழ் தினப்போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 23ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 9மணிக்கு கிளி/கிளிநொச்சி மத்தி மகா வித்தியாலய த்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப்பணிப்பாளர் பி.செல்வின் இரேமியஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், எதிர்வரும் 22ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 9மணிக்கு போட்டி இலக்கங்களான 15,16, பிரிவுகள் 1,2 இற்குரிய வாசிப்புப் போட்டிகளும் போட்டி இலக்கம் 45, திறந்த போட்டி தமிழறிவு வினா விடையும் போட்டி இலக்கம் 47, பிரிவு வி.பி II சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசி ப்புப் போட்டியும்,போட்டி இலக்கம் 48, வி.பி-II சிங்கள மாணவர் களுக்கான தமிழ் வாசிப்புப் போட்டி யும், போட்டி இலக்கம் 49, பிரிவு வி.பி- II சிங்கள மாணவர்களுக் கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி யும் போட்டி இலக்கம் 50 பிரிவு வி.பி- II சிங்கள மாணவர்களுக் கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி யும் நடைபெறும்.

மறுநாள் சனிக்கிழமை போட்டி இலக்கம் 17பிரிவு,பிரிவு1இற்கான ஆக்கத்திறன் வெளிப்பாட்டுப்போட்டியும் போட்டி இலக்கம் 18 தொடக்கம் 22 வரையிலான 1,2,3,4,5 ஆகிய பிரிவு களுக்கு பேச்சுப் போட்டிகளும் போட்டி இலக்கம் 22 தொடக்கம் 27வரையிலான 1,2,3,4,5 ஆகிய பிரிவுகளுக்கு பாவோதல் போட்டியும் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் வலய மட்டப் போட்டிகளில் பங்கேற்று முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தந்த வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# ஆசிரியர்களின் விபரத்தினை உடன்அனுப்புமாறு கோரிக்கை

(முல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய, வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அழகியல் பாட ஆசிரியர்களிடமிருந்து ஆரம்பக்கல்வி பாடத்தினை கற்பிக்க விரும்புகின்ற ஆசிரியர்களின் விபரத்தினை அனைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களிடமிருந்தும் கோரியுள்ளார் வடக்கு மாகா ணக் கல்வித்திணைக்கள மாகாண க் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வடக்குமாகாணத்திலுள்ள அனைத்து வலயக்கல்வி அலுவலகங்களின் கீழுள்ள பாடசாலைகளில் அழகியல் பாட ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களிடமிருந்து ஆரம்பக் கல்வி பாடத்தினை கற்பிக்க விரும்பும் ஆசிரியர்களின் விபரங்களையும் அவர்கள் தொடர்பான ஆவணங்களையும் உடன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் மண்ணை வைத்து லண்டனில் மக்கள் நினைவேந்தல்





பிரித்தானிய தமிழர் பேரவையின், ஏற்பாட்டில் லண்டனில் முள்ளிவாய்க்கால் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு லண்டன் மத்திய நகரமே ஸ்தம்பிக்கும் அளவு மக்கள் கூடினார்கள்.எம்பாக்மென் தொடரூந்து நிலையத்தில் இருந்து ஊர்வலமாக ஆரம்பித்த மக்கள், பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் வாசஸ்தலமான நம்பர் 10 டவுனிங் வீதிக்கும் முன்னால் நின்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் லண்டனில் ஈஸ்காம் நகர மண்டபத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு பெரு எழுச்சியுடன் இடம்பெற்றது.

இதில் முள்ளிவாய்க்காலில் இருந்து மண் கொண்டுவரப்பட்டு அந்த மண்ணை மக்கள் அஞ்சலிக்காக வைத்து வணக்கம் செலுத்தினர்.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட மே 17இல் இந்த நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. இதில் பாசறைப்பாணர் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை பிரான்சிலும் மிக உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. பெருமளவான மக்கள் திரண்டு, உயிர் நீத்த உறவுகளிற்கு அஞ்சலி செலுத்தினார்கள். தமிழ் மக்களுடன் இணைந்து ஐரோப்பியர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு, அஞ்சலி செலுத்தியிருந்தனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே உண்மை வெற்றி பெறும்.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாணவியின் கோரக்கொலையை யாழ்.வணிகர் கழகம் கண்டிப்பு

## ஆர்ப்பாட்டம், கதவடைப்பிற்கு அழைப்பு

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வித்தியாவின் கோரமான படுகொலையை யாழ். வணிகர் கழகம் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் இன்றைய தினம் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டம், வர்த்தக நிலைய கதவடைப்புகளிற்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சமூகத்தில் பாலியல் வன்புணர்வுக் கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை மிகவும் துரதிர்ஷ்டமானதும் மிகவும் மன வருத்தத்திற்கும் உரியதாகும்.

எமது பிரதேசத்தில் அதிகரித்துள்ள மது பாவனை மற்றும் போதைப் பொருள் பாவனையின் விளைவாகவே இம்மாதிரியான சம்பவங்கள் தலைவிரித்தாடுவதனைக் காண முடிகின்றது.

இது சம்பந்தமாக ஒவ்வொரு பொதுமகனும் விழிப்புடன் செயற்பட வேண்டிய ஒரு காலகட்டமாகும். சமூக அமைப்புக்கள் கிராமிய மட்டங்களில் மதுபாவனை, போதைவஸ்து பாவனைகளை கண்காணித்து அவற்றைக்களைய முன் வரவேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாத வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் அந்தந்த ஊர் அமைப்புக்கள் ஈடுபடவேண்டும். இதன்மூலமே பாதுகாப்பான சமூக ஒழுங்கமைப்பை நாம் உறுதி செய்து கொள்வதுடன் எமது எதிர்கால சந்ததியையும் இனத்தையும் பாதுகாக்க முடியும்.

எனவே இலங்கை ஆசிரியர் சங்கம் இன்று புதன்கிழமை நடத்தும் ஆர்ப்பாட்டத்திலும் வடமாகாண ஆளுநரிடம் மனுகையளிக்கும் நிகழ்விலும் கலந்து கொள்வதற்காக அனைத்து வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஆதரவைத் தெரிவித்துக் கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நினைவேந்தல் நிகழ்வு குறித்து முல்லை நீதிமன்றுக்கு அறிவிப்போம்

## முள்ளிவாய்க்கால் குறித்து பொலிஸ் அதிகாரி தகவல்

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வு தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு பொலிஸார் அறிக்கை சமர்ப்பிப்பர் என்று பொலிஸ் அதிகாரி ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்து நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை முள்ளிவாய்க்காலில் வட மாகாண சபையின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டிருந்தது.

முன்னதாக, விடுதலைப் புலிகளை நினைவு கூரும் எந்த நிகழ்வுகளையும் முல்லைத்தீவு பொலிஸ் பிரதேசத்துக்குள் நடத்தக் கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கடந்த சனிக்கிழமை உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ் அதிகாரி,

இந்த நிகழ்வு இடம்பெற்ற சூழல் மற்றும் இதன் நோக்கம் தொடர்பாக நாம் இதுவரை உறுதிப்படுத்தவில்லை. ஆனால் இது போரில் இறந்து போன தமது உறவுகளை நினைவு கூரும் நிகழ்வு என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, நீதிமன்ற உத்தரவு ஒன்று உள்ளது. இது குறித்து நாம் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்போம். இது தொடர்பில் நீதிமன்றமே இறுதியான முடிவை எடுக்கும்.

நீதிமன்றம் விடுதலைப் புலிகளை நினைவுகூரும் பேரணிகளையோ, ஆர்ப்பாட்டங்களையோ நடத்தக் கூடாது என்று தான் கூறியுள்ளது. ஆனால், தாம பேரணியையோ, ஆர்ப்பாட்டங்களையோ நடத்தவில்லை என்று இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கூறினர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

### ஜூன் மாத நடுப்பகுதியில் நாடாளுமன்று கலைக்கப்படும்

ஜூன் மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றம் நிச்சயம் கலைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதற்கான சாதகமான சூழ்நிலை 19-ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக உருவாகியுள்ளது. 20-ம் திருத்தச் சட்டம் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

எனினும் 20-ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த போதியளவு கால அவகாசம் கிடைக்காத காரணத்தினால் புதிய நாடாளுமன்றில் சட்டத்தை நிறை வேற்ற எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் தெரிவித்துள்ளார். இதேவேளை புதிய தேர்தல் திருத்த சட்டம் தொடர்பான நடவடிக்கைகளும் விரைவில் வெளியாகும் என்று நம்பப்படுகின்றது. (இ)

### டில்லியில் நடந்த கொடூரமும் புங்குடுதீவில் நடந்த நெட்டூரமும்

இது இந்தியாவின் டில்லியில் நடைபெற்ற சம்பவம். மருத்துவ பீட மாணவி ஒருவர் தனது காதலனுடன் டில்லி நோக்கிப் பயணிக்கிறார். இரவுப் பொழுது பஸ்ஸில் பயணித்த ஐந்து இளைஞர்கள் காதலனை அடித்துப் போட்டுவிட்டு அந்தப் பெண்ணைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துகின்றனர்.

தமது இச்சை தீர்ந்து போக ஓடும் பஸ்ஸில் இருந்து அந்தப் பெண்ணைத் தூக்கி எறிந்து விட்டு பஸ் ஓடித் தப்பி விடுகிறது.

பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகிய துன்பம் ஒரு புறம். ஓடும் பஸ்ஸில் இருந்து தூக்கி எறிந்த அட்டூழியம் மறுபுறமாக கோமா நிலையில் இருந்த அந்த மருத்துவ பீட மாணவி சிகிச்சை பலனின்றி இறந்து போகின்றார்.

உலகை உலுக்கிய இச் சம்பவத்தால் இந்திய தேசம் எங்கும் ஒரே கலவரம்; ஆர்ப்பாட்டம். அந்த மாணவியை பலாத்காரம் செய்த ஐந்து கயவர்களும் சிறையில் அடைக்கப்படுகின்றனர். சிறையில் அடைபட்ட ஐவரில் ஒருவர் சிறைக்கு உள்ளேயே தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்கிறார்.

ஏனைய நான்கு பேருக்கும் நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கிறது. 2012ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி நடந்த இச் சம்பவத்திற்கு டில்லி நீதிமன்றம் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி அந்த நான்கு பேருக்கும் மரண தண்டனை விதிப்பதாக தீர்ப்பளிக்கிறது.

குற்றச் செயல் நடந்து ஒன்பது மாதங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்பதற்குள் நீதிமன்றம் தனது விசாரணையை விரைவுபடுத்தியிருந்தமை இங்கு நோக்குதற்குரியது.

டில்லியில் மருத்துவ பீட மாணவிக்கு நடந்த கொடுமைக்கு எதிராக இந்திய தேசம் எங்கும் எதிர்ப்புக் கிளம்பியதாலும் சமூக பொது அமைப்புகள் வெளியிட்ட கடுமையான கண்டனங்கள் காரணமாகவும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்து மக்களின் ஆவேசத்தை-கொந்தளிப்பை கட்டுப்படுத்தும் தார்மிகக் கடமையை டில்லி நீதிமன்றம் செய்து முடித்தது.

இவ்வாறு டில்லியில் மருத்துவ பீட மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்திற்கு ஒருபடி மேலான கொடுமைத்தனங்களுடன் புங்குடுதீவில் பாடசாலை மாணவி ஒருவர் கொல்லப்பட்டார்.

பாடசாலைக்குச் சென்றவேளை அந்த மாணவியை வழி மறித்து கூட்டு வன்புணர்வு நடத்தி கொடூரமாகக் கொன்ற மாபாவச் செயலால் வடபுலம் எங்கும் கொதிப்படைகிறது. சமூக நீதிக்காக இளைஞர்கள் ஒன்று திரண்டு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இளைஞர்களின் இந்த வெளிப்படுத்தல் இத்தகைய குற்றச் செயல்கள் இனிமேல் இடம்பெறாதவாறு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

எனினும் புங்குடுதீவு மாணவியின் படுகொலை தொடர்பில் எழுந்துள்ள ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள் என்பன குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்; எக்காரணம் கொண்டும் அவர்கள் விடுதலை பெற்று விடலாகாது என்பதை இறுக்கமாக உணர்த்தி நிற்கிறது.

அதேநேரம் புங்குடுதீவில் இடம்பெற்ற சம்பவத்திற்கு எதிராக சமூக நீதிக்காக குரல் கொடுக்கும் இளைஞர்கள், பொதுமக்கள் காட்டிவரும் அகிம்சைப் போராட்டங்கள் கனதியானவை.

அதேநேரம் எங்கள் மண்ணில் குற்றச் செயல்களை முற்றாக இல்லாது ஒழிக்க வேண்டுமாயின் குற்றவாளிகளுக்கான தண்டனை மிக விரைவாக வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் எங்கள் சமூகம் விழிப்படையும். எந்தக் குற்றச் செயல்களையும் செய்து விட்டு தப்பிவிடலாம் என்ற நினைப்புக்கு சாவு மணி அடிக்க வேண்டுமாயின்-சமூக கொந்தளிப்புக்கு மதிப்பளிக்க வேண்டுமாயின் மிக விரைவாக நீதிமன்றம் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும்.

டில்லி நீதிமன்றம்போல இங்கும் மிக விரைவாக தீர்ப்பு வழங்குவதன் ஊடாக சமூகத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு, பெண்களின் பாதுகாப்பு என்ற பொது விடயங்களைக் காப்பாற்ற முடியும் என்பது நம் திடமான நம்பிக்கை.

# திருமுறை மனனப்போட்டி

வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1,2 பாலர் பிரிவிலும் தரம் 3,4 கீழ்ப் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது. பாலர் பிரிவுக்கு தோடுடைய செவியன், மந்திரமாவது நீறு ஆகிய இரு திரு முறைகளும் கீழ்ப்பிரிவிற்கு வாழ்க அந்தணர், மானினேர் விழி மாதராய் வழு ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.


திருமுறை மனனப்போட்டி இம்மாதம் 28 ஆம் திகதி யாழ்.வண்.நாவலர் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 23 ஆம் திகதியாகும். போட்டிக் கட்டணமாக 60 ரூபாய் அறவிடப்படவுள்ளது.

பரிசில்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப்போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகம், இல. 182, [illegible] வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பிற்பகல் 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக்கழக சமயப் பிரசாரகரும் பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தேடுவது உனக்குக் கிடைக்கும்



✦ வெண்ணெய் எடுக்க சூரிய உதயத்திற்கு முன்பாக கடைய வேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மிக நெறியில் நின்று மனதைக் கடவுளிடம் செலுத்தினால் தான் இறைக்காட்சி கிடைக்கும்.

✦ மனிதனின் மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அது கிழிந்து, நாலாப் பக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று, உலக விஷயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

✦ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான், செல்வத்தைத் தேடுபவன் அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.

✦ "நான்" என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும் குணத்தை அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லா லிகா காற்பந்து போட்டி பார்சிலோனா அணி சம்பியன்

ஸ்பெயினில் நடைபெற்று வந்த லா லிகா காற்பந்து தொடரில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வென்றது.

லயோனல் மெஸ்ஸி, நெய்மர், லுயிஸ் சுவாரஸ் போன்ற முன்னணி வீரர்களை கொண்ட பார்சிலோனா அணி தனது கடைசி லீக் போட்டியில் அட்லெடிகோ மாட்ரிட் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.



ஸ்பெயினில் நடைபெறும் 20 முன்னணி காற்பந்து கிளப்புகளுக்கு இடையிலான லா லிகா போட்டி கோடிக்கணக்கான ரசிகர்களை கொண்டது. 1927 ஆம் ஆண்டு முதல் இப்போட்டி நடைபெற்று வருகிறது. லீக் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்று புள்ளிகள் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் அணியே சம்பியன் பட்டம் வெல்லும்.

இதன்படி 37 லீக் போட்டிகளில் பங்கேற்று 30 வெற்றி, 3 சமநிலை, 4 தோல்வி உட்பட 93 புள்ளிகள் பெற்ற பார்சிலோனா அணி முதலிடம் பிடித்து 23ஆவது முறையாக சம் பியன் பட்டத்தை கைப்பற்றியது.

போர்ச்சுகலைச் சேர்ந்த முன்னணி வீரர் கிறிஸ்டியானே ரொனால்டோ இடம் பெற்றுள்ள ரியல் மாட்ரிட் அணி 37 போட்டிகளில் 29 வெற்றி, 2 சமநிலை 6 தோல்விகளுடன் 89 புள்ளிகள் பெற்று 2ஆவது இடம் பிடித்தது.

மூன்றாவது இடத்தை 77 புள்ளிகளுடன் அட்லெடிகோ மாட்ரிட் அணி கைப்பற்றியது. கடந்த சீசனில் அட்லெடிகோ மாட்ரிட் அணி சம்பியன் பட்டம் வென்றது. முதல் மூன்று இடங்களை பிடித்த அணிகள், 2015-16 இல் நடக்கவுள்ள சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாட தகுதி பெற்றுள்ளன.

மாட்ரிட் நகரில் நடந்த கடைசி லீக் போட்டியில் பார்சிலோனா அணி அட்லெடிகோ மாட்ரிட் அணியை எதிர்கொண்டது. இதில் முதல் பாதி, கோல் எதுவுமின்றி முடிந்தது. இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி கோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுத் தந்தார். கடைசி வரை போராடிய அட்லெடிகோ மாட்ரிட் அணி வீரர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இறுதியில் பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் போட்டியில் வெற்றி பெற்றதுடன் சம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியது.

லா லிகா போட்டியில் பார்சிலோனா அணி இப்போது 23 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

ரியல் மாட்ரிட் அணி இதுவரை 32 முறை சம்பியன் பட்டம் வென்று அதிக முறையாக சம்பியனான அணிகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. 3ஆவது இடத்தில் 10 முறை சம்பியனான அட்லெடிகோ மாட்ரிட் அணி உள்ளது.

2013-14ஆம் ஆண்டு சீசனில் குறிப்பிடத்தக்க வகையில் சிறப் விளையாடாத மெஸ்ஸி 2014-15 ஆம் ஆண்டு சீசனில் தனது ஆட்டத் திறனை மீண்டும் மீட்டுள்ளார். அதற்கு லா லிகா போட்டியும் முக்கிய காரணமாக அமைந்தது. இந்த முறை மெஸ்ஸி அடித்த ஒரு கோல் தான் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வெல்ல காரணமாக இருந்தது.

இந்த சீசனில் அவர் இதுவரை 54 போட்டிகளில் பங்கேற்று 54 கோல் அடித்துள்ளார். 27 கோல் அடிக்க உதவியுள்ளார். கடந்த சீசனில் 46 போட்டிகளில் பங்கேற்ற மெஸ்ஸி 41 கோல் மட்டுமே அடித்தார். 14 கோல்களை அடிக்க உதவிகரமாக இருந்தார். 27 வயதாகும் மெஸ்ஸி ஆர்ஜென்டீனா அணியின் கப்ட னாகவும் உள்ளார்.

இப்போட்டித் தொடரில் அதிக கோல் அடித்தவர் பட்டியலில் ரியல் மாட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதலிடம் பிடித்தார். அவர் 45 கோல்களை அடித்து அசத்தியுள்ளார். பார்சிலோனா அணியின் லயோனல் மெஸ்ஸி 41 கோல் அடித்து 2 ஆவது இடத்தைப் பிடித்தார்.

பார்சிலோனா அணியின் நெய்மர், அட்லெடிகோ மாட்ரிட் அணியின் ஆண்டனி கிரிஸ்மேன் ஆகியோர் தலா 22 கோல்கள் அடித்து 3ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டனர்.

இது தவிர, அதிக "ஹட்ரிக்" கோல் அடித்த வீரர்கள் பட்டியலிலும் ரொனால்டோ முதலிடத்தில் உள்ளார். அவர் இத்தொடரில் 7 முறை ஹாட்ரிக் கோல் அடித்துள்ளார். அதற்கு அடுத்ததாக மெஸ்ஸி 5 முறை ஹட்ரிக் கோல் அடித்துள்ளார். (க)

# ஆஷஸ் தொடருக்கு பின் ரோஜர்ஸ் ஓய்வு



அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தொடக்க வீரராக களம் இறங்கி விளையாடி வரும் ரோஜர்ஸ் ஆஷஸ் தொடருக்குப்பின் ஓய்வு பெறுவதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்

"இங்கிலாந்து கவுண்டி போட்டியில் பல வருடங்களாக விளையாடி வரும் எனக்கு இந்த ஆஷஸ்தொடர்தான் அவுஸ்திரேலியாவிற்காக நான் விளையாடும் கடைசி தொட ராக இருக்கும். இரண்டாவது முறை யாக நான் இங்கிலாந்து சென்று விளையாட இருக்கிறேன். இது மகிழ்ச்சி அளிக்கிறது. அதிர் ஷ்டசாலியான நான் அங் குள்ள ஒவ்வொரு நிகழ்வையும் நேசிக்கிறேன்" என்றார்.

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணிக்கு தொடக்க வீரராக களம் இறங்கும் 37 வயதான ரோஜர்ஸ் 20 போட்டிகளில் விளையாடி 1535 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் நான்கு சதங்கள் அடங்கும். (க)

## மெய்வன்மைப்போட்டி எதிர்வரும் 29ம் திகதி ஆரம்பம்

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் 14,15,18,20,23 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான மெய்வன்மைப் போட்டிகள் எதிர் வரும் 29,30, 31 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள் ளன.

மேற்படி மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றவுள்ள வீரர்கள், வீராங்கனைகள் யாழ். மாவட்ட மெய் வன்மைச் சங்கத்தின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# உதைபந்தாட்ட தேசிய அணியில் சென்.ஜோன்ஸ் மாணவன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை 15 வயதுப்பிரிவு உதைபந்தாட்டத் தேசிய அணி குழாமில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஜெனுசன் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இலங்கை 15 வயதுப் பிரிவு தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான நிகழ்வுகள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு பத்தேகான் மைதானத்தில் இடம்பெற்றன.

தேசிய அணிக்கான 18 பேர் கொண்ட இந்த அணியில் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெனுசன் தெரிவாகியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# டென்னிஸ் தரவரிசை ஷரபோவா முன்னேற்றம்

ரஷ்யாவின் முன்னணி டென்னிஸ வீராங்கனையான மரியா ஷரபோவா ரோம் மாஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றதன் மூலம் 2ஆவது இடத்திற்கு முன்னேறி யுள்ளார்.

உலக டென்னிஸ் சம்மேள னம் டென்னிஸ் தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட் டது. இதில் மரியா ஷரபோவா 7710 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திற்கு முன்னேறினார. இவரிடம் தோல்வியடைந்த கார்லா சுவாரஸ் முதன்முறை யாக 8ஆவது இடத்திற்கு முன் னேறினார். சுவாரசுக்குஎதிரான அரையி றுதியில் தோல்வியடைந்த ரோமா னியாவைச் சேர்ந்த சிமோனா ஹாலேப் 2ஆவது இடத் திலிருந் து 3ஆவது இடத் திற்கு பின் தங் கினார். செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையை வீழ்த்திய மும்பை இறுதிப் போட்டிக்குத் தகுதி



சென்னை சுப்பர் கிங்ஸை வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ்

இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

ஐபிஎல் சீசன் 8-ன் நேற்றைய ஆட்டத்தில் சென்னை - மும்பை அணிகள் மோதின.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய மும்பை அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்கள் குவித்தது.

188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய சென்னை அணி 20 ஓவரில் 10 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்து தோல்வியுற்றது.

எனவே மும்பை இந்தியன்ஸ் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மும்பை அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மும்பை அணியின் பொலார்ட் தெரிவானார். (க)



## சந்தேகநபரை தப்பிக்க...

சம்பவத்தையடுத்து புங்குடுதீவு உட்பட்ட வடபகுதி முழுவதும் தொடர் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

இதனால் பதற்ற நிலைகள் காணப்படுகின்றன. இதேபோன்று புங்குடுதீவிலும் பதற்ற நிலை காணப்படுகிறது. இதனையடுத்து புங்குடுதீவில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என பொது அமைப்புக்களால் பல்வேறு கோரிக்கைகளும் விடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் நேற்று புங்குடுதீவில் வடஇலங்கை சர்வோதய மண்டபத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க, யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், ஊர்காவற்றுறை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சேனாரட்ன உட்பட்ட உயர் பொலிஸ்மா அதிகாரிகளும், புங்குடுத்வைச் சேர்ந்த புத்திஜீவிகள், பிரபல சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பொதுமக்களின் கருத்துக் கேட்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது பேசிய வேலணை பிரதேசசபைத் தவிசாளர். வி.ரி. தமிழ்மாறன் அவர்களால் நேற்று (திங்கட்கிழமை) புங்குடுதீவில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட சந்தேக நபர் தப்பிச் சென்று கொழும்பில் வெளிநாடு செல்வதற்காக தங்கியுள்ளார்.ஆனால் பத்திரிகைகளில் அவர் பொலிஸ் நிலையத்தில் என்று உள்ளது. அவர் பொலிஸல் ஒப்படைக்கப்பட்டாரா? அல்லது தப்பிக்க விடப்பட்டாரா என கேள்வி எழுப்பப்பட்டது. எனினும் அதற்கு பதில் வழங்காமல் கூட்டம் நடைபெற்றது. இதன் போது குறுக்கிட்ட பெண் ஒருவர் கூட்டத்தை நறுத்து மாறும்விரி. தமிழ்மாறனை கைது செய்யுமாறும கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து கூட்டத்தில்இருந்த அனைவரும்ஆக்ரோஷம் அடைந்து பிரபல சட்டத்தரணி மீது தாக்குதல் நடந்த திட்டமிட்டனர்.

இதனை அறிந்து பொலிஸார் அவரை காப்பாற்ற முற்பட்டதுடன் அவரை கூட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து கொண்டு செல்லவும் முற்பட்டனர்.

இதனால் கொதித்தொழுந்த மக்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர்.

எனினும் சட்டத்தரணியும் அவரது மகள் மற்றும் மனைவி ஆகியோரும் பொலிஸாரின் ஜீப்பில் ஏற்றப்பட்டு வெளியே கொண்டு செல்லப்பட்டனர். இதனையடுத்து மக்கள் ஜீப்புக்கு முன்னாள் கிடந்தும் அதனைச் சுற்றிவளைத்தும் போராட்டத்தில் ஈடுபடடனர். இதனால் அவரை கொண்டு செல்ல முடியாமல் போனது.

தொடர்ந்து பொலிஸார் சமரச முயற்சியில் இறங்கிய போதும் பொதுமக்கள் அவரை வடவில்லை. இதனை அறிந்து விசேட அதிரடிப் படை, கடற்படை, இராணுவம், பொலிஸ் என பெருமளவானோர் வரவழைக்கப்பட்டு குவிக்கப்பட்டன. அத்துடன் இராணுவத்தை கொண்டு சட்டத்தரணியை காப்பாற்றவும் முற்பட்டனர்.

எனினும் அது முடியாமல் போனதுடன் மேலும் மேலும் மக்கள் கூட்டமும் இராணுவத்தினரின் தொகையும் அதிகரிக்கப் பட்டன். சுமார் 6 மணிவரை பொது மக்களின் சுற்றிவளைப்புப் போராட்டம் நடைபெற்றது.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே வேலணை பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி வரவழைக்கப்பட்டு அவருடன் பேசப்பட்டது. இதனை அறிந்து தப்பிக்க விடப்பட்ட குற்றவாளியையும், சட்டத்தரணியையும் இன்று மதியம் யாழ்.நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் என வட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் கையொப்பமிட்ட கடிதத்துடன் விடுவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து இவர்கள் நீண்டதொரு வாகனத்தொடரணியின் மூலம் அனுப்பப்பட்டனர். இதேவேளை காலை நடைபெற்ற கூட்டத்திற்காக வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் போராட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து விலகிச் சென்றனர். அத்துடன் மக்கள் சிலர் தமது பொழுது போக்குக்காக இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாக கூட்டமைப்பின் சிரேட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடபிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்தார்.

இதேவேளை இன்று பொது மக்கள் நீதிமன்றின் முன் கவனயீர்ப்பு நிகழ்வு ஒன்றையும் நடத்த திட்டமிட்டதாக கூறப்பட்டது. இதேவேளை வி.ரி.தமிழ்மாறன் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் களமிறங்க திட்டமிட்டிருந்தார் என்றும் கூறப்பட்டது. (எ-4)

## மற்றொருவர்...

வெள்ளவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பரபல சட்டத்தரணி வி.ரி.தமிழ் மாறனால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் தப்பிச் சென்றதாக கூறப்பட்ட சுவிஸ் நாட்டைச் சேர்ந்த குமார் என்று அழைக்கப்பட்ட நபரே வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டவராவார்.

பிரஸ்தாப நபரை வெள்ளவத்தையில்கண்ட பொதுமக்கள் அவரை தாக்க முற்பட்டுள்ளனர்.

எனினும் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப நபர் இன்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை இந்நபர்வேலணையில் வைத்து பொதுமக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்பு குறிப்பிடத்தக்கது. (எ-4)




## வேலணைத்துறையில்...

வாகனத் தொடரணி நிறுத்தப்பட்ட நிலையில்வேலணை துறையூர் கடற்படை முகாமிற்குள் சட்டத்தரணியை ஏற்றிச் சென்ற வாகனத்துடன் சில வாகனங்கள் உள்ளே சென்றன.

பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலரின் வாகனங்கள் என்பன வீதியில் தரித்து நின்றன.

அதேவேளை வங்களாவடி தொடக்கம் வேலணைத்துறை விரையான வீதியில் பொலிஸார், இராணுவம் மற்றும் கடற்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

வேலணை துறையில் ஆணகள் பெண்கள் எனப்பலர் திரண்டிருந்தனர். இந்நிலையில் இளைஞர்களின் கோரிக்கைக்கு அமைய சகல வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் பயணத்தை தொடர அனுமதிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

எனினும் அந்த வாகனங்களில் சட்டத்தரணி இருக்கவில்லை என்றும் கூறப்பட்டது. இதேவேளை நேற்று நள்ளிரவு வரை போராட்டம் தொடர்ந்தது. (எ-4)

## போராட்டங்கள்...

ருந்தது.

பின்னர் அவர் அங்கு இல்லை என தெரிந்ததும் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து விலகி சென்றுள்ளனர். பின்னர் யாழ்.நீதிமன்ற கட்டடத்தொகுதி முன்பாக திரண்ட போராட்டக்காரர்கள் வித்தியாவின் படுகொலைக்கு நீதி வழங்குமாறும் கோசமிட்டனர்.

பின்னர் யாழ்.நகரில் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பிற்கு வர வழைக்கப்பட்டதனை அடுத்து ஆர்ப்பாட்டகாரர்கள் ஓரளவு அவ்விடங்களை விட்டு வெளியேற தொடங்க யாழ்.நகரில் தொடர்ந்த ஆர்ப்பாட்டம் படிப்படியாக முடிவுக்கு நண்பகல் வேளை கொண்டு வரப்பட்டு ஆர்ப்பாட்டகாரர்களின் முற்றுகையிலிருந்த யாழ்.நகர் மாலை வேளை விடுதலை பெற்றது.

இதேவேளை யாழ்.இந்து கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி மற்றும் சென்.ஜேம்ஸ் உள்ளிட்ட யாழ்ப்பாணம் மற்றும் அதனையண்டிய இடங்களில் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் தத்தமது பாடசாலை முன்பாக ஒரு மணிநேர கண்டன போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

உரியவர்கள் இருந்தால் இவ்வாறு நடக்குமா?. நீதியே தாமதிக்காமல் நீதியை வழங்கு!. எங்கள் பிரதேசம் உங்களுக்கு சுடுகாடா? வித்தியாவிற்கு நீதி கோருவோம்வாருங்கள். பெண்ணினமே எழுந்திரு நீதிகோருவோம். வடக்கில் குற்றம் செய்தால் தண்டனை இல்லையாயா? மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள். குற்றம் இழைத்தவர்களுக்கு அதிகபட்ச தண்டனையான தூக்கு தண்டனையை வழங்குங்கள் நாங்கள்என்ன ஆபாசப்பொருட்களா?

எமக்கான நீதிக்கு இனியும் தாமதம் வேண்டாம்.ஒருத்திக்கு இழைத்த மோசம் நாட்டிற்கு இழைத்த நாசம்.பள்ளி மாணவர்களை இரையாக்காதே?.வித்தியா முற்றுப்புள்ளியா இல்லை தொடர் கதையா? எழுந்திரு மாணவ சமுதாயமே. மரண தண்டனையா அதுக்கும் மேல் மக்களிடம் விட்டு விடு. சட்டமே உன் சட்டப்பை களுக்குள் நீதியை மறைத்து விட்டாயா?. சட்டவாளிகளே மீண்டும் வித்தியாவை கொன்று விடாதீர்கள், இதுவரை பொறுமையாக இருந்தது போதும் பொங்கிஎழு பெண்ணினமே. நீதியின் கண்கள் குருடா?. குற்றவாளிகளுக்கு பிணை வழங்காதே. என்று எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகம் மற்றும் படுகொலைகளுக்கு எதிராக புதிய சட்டம் ஒன்றை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் எனக்கோரி யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயம் முன்பாக நேற்றைய தினம் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியொன்றினையும் மக்கள் சக்தி அமைப்பினர் முன் எடுத்திருந்ததோடு பேரணியாக சென்று யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது கற்பழிப்புக்கள் தொடர்பில் புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு வடமாகாண சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டக் காரர்கள்கூறினர். ஆர்ப்பாட்டகாரர்கள் யாழ்.மாவட்டச் செயலகத்துக்குச் சென்று அங்கு யாழ்.மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

கடந்த 13ஆம் திகதி பாடசாலைக்குச் சென்ற மாணவி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, மூவர் விளக்கமறியலிலும் ஐவர் பொலிஸ் காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், மாணவியின் கொடூரகொலைக்கு நீதி வேண்டுமெனவும் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கோரியும் வடக்கு முழுவதும் பேரணிகள் கடையடைப்புக்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் என்பன நேற்று , இன்று, நாளை

பிடத்தக்கது. (செ-4)

## வடக்கு எங்கும் இன்று...

படுகொலையைக் கண்டித்தும் அப்படுகொலைக்கு காரணமான குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும்கொலைச் சந்தேகநபர்களுக்கு ஆதரவாக எந்த சட்டத்தரணியும் முன்னிலையாகக்கூடாது என்பதை இறுக்கமாக தெரிவிக்கும் வகையிலும் யாழ். பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களும் இன்று புதன் கிழமை வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

இதேபோன்று கொக்குவிலில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்வுள்ளனர்.

இதைவிட மாணவி படுகொலையை எதிர்த்து யாழ். மாவட்ட இளைஞர் கழகம் யாழ். நூலகத்துக்கு முன்பாக காலை 10 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் ஒனறை நடத்தவுள்ளது.

மேலும் யாழ்.மாவட்ட தனியார் பேருந்துகள், அரச பஸ்கள் என்பனவும் சேவையில் ஈடுபடாது புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அரச அலுவலகங்கள் மற்றும் தனியார் வர்த்தக நிலையங்கள்என்பன வும்இன்று தமது எதிர்பபை வெளிப்படுத்தவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரின் பாதிப்...

நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, மாத்தறை பகுதியில் முக்கிய நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளின் மூலம் மாத்திரமே இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி விட முடியாது என்று கூறிய மைத்திரிபால சிறிசேன அபிவிருத்தியுடன் நல்லிணக்கத்துக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுதான் தனது அரசாங்கத்தின் கொள்கை என்றார்.

நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் உண்மை கண்டறியப்பட வேண்டும் என்றும் நியாயம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும், அதன் மூலமே இனங்களுக்கு இடையிலான பீதி மற்றும் சந்தேகம் நீக்கப்பட முடியும்என்றும்அவர்குறிப்பிட்டார்.

யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட சமாதான சூழல் பாதுகாக்கப்பட்டு, மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதில் முப்படைகளும் ஏனைய அரசாங்க நிறுவனங்களும் ஆற்றிய பங்களிப்பு நல்லிணக்க விடயத்திலும்பெற்றுக்கொடுக்கப்பட வேணடும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-11)

## போராட்டங்கள் தீவிரம்...

நேற்றைய தினம் இடம்பெற்ற போராட்டங்களால் வடக்கின் செயற்பாடுகள் அனைத்தும் முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைநதிருந்தது.

இதில் யாழ்.நகர் நேற்றைய தினம் போராட்டங்களால் நிறைந்து பெரும் யுத்த பூமி போல் காட்சியளித்தது. இளைஞர்களினால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டங்களின போது பொலிஸார் எவரும் எங்கும் தலை கூட காட்டாது அவரவர பொலிஸ் நிலையங்களிலேயே முடங்கினர்.

புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவிக்கு நீதிகோரும் வகையில் யாழப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி உட்படபலமாவட்டங்களில்உள்ள இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நேற்று முதல் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இதில்யாழில உள்ளபாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் வீதிகளில் இறங்கி வித்தியாவிற்கு நீதி கோரும வகையில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

நேற்று காலை ஒன்பது மணியளவில் யாழ். நகரில்ஒன்று கூடிய இளைஞர்கள் பேரணியொன்றினை முன்னெடுத்து யாழ்.வைத்தியசாலை வீதி மற்றும் கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி என அனைத்து வீதிகளிலும் இறங்கி பெரும் பேரணியொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் யாழ். நகரில் உள்ள கடைகள் அனைத்தையும் மூடுமாறு இளைஞர்கள் உத்தரவிட்டதையடுத்து பெருமபாலான கடைகள் மூடப்பட்டன.

எனினும் சில கடைகள் திறந்து காணப்பட்டிருந்தன. இக்கடைகள், நிறுவனங்களுக்குளபுகுந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் வலுக்கட்டாயமாக கடைகளை பூட்டி எச்சரிக்கையும் செய்தனர். இதனால் நேற்று பத்து மணிக்கு பின்னர் யாழ்.நகரில் உள்ள அனைத்து கடைகளும் பூட்டப்பட்டு யாழ்.நகரே போராட்டங்களால் நிரம்பி வழிந்தது. மதியத்தின் பின்னர் யாழ்.நகர் சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

மத்திய பஸ் நிலையம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட இவ்வார்ப்பாட்டம் ஒருகட்டத்தில் பேரணியாக உருவெடுத்து கைது செய்யப்பட்ட குற்றவாளிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி யாழ்.பொலிஸ் நிலையத்தினை முற்றுகையிட தொடங்கினர்.

இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் நிலை உருவாக நிலைமை மேலும் பதற்றமாக கலகமடக்கும் பொலிசார் பொலிஸ் நிலையத்திற்கே பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவராக கூறப்படுகின்ற வெளிநாட்டு நபரொருவரை தப்பிக்க விட்டதாக கூறப்படுகின்ற சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன் தங்கியிருந்ததாக கருதப்படுகின்ற யாழில் உள்ள விருந்தினர் விடுதியொன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டி

23ஆம் பக்கம் பார்க்க....




### கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரிய மாணவன்
திரு.சீ.அஜந்தன் அவர்களின்
பாசமிகு தந்தை
அமரர் **சபாபதி சீனிவாசகம்** அவர்களின்
மறைவையிட்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
**இணைப்பாளர், முதுகல்விமாணி மாணவர்கள் (11ஆம் அணி), உயர்பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**
(521)

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
**எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...**
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA WORK VISA – SKILLED MIGRATION – VISIT VISA
**கனடா** Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
**Student VISA** — UK, Australia, Spain, New Zealand, Canada Switzerland & Malaysia
**FREE** Assessment Send your CV to info@sikaram.lk — மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்தகொள்ள www.sikaram.lk
**Sikaram (Pvt) Ltd.**
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004, 021 222 00 11
(C-1008)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550 0777585913, 0777222422, 071429935
கிழமை நாளுக்கான மாலை வகுப்புகள் 2.30 - 5.00 மணி வரை புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளது
அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள்23/05/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.
Batch 1 : 23-05-2015
Batch 2 : 25-05-2015
Batch 3 : 27-05-2015
Batch 4 : 30-05-2015
(C-1010)

**English for you**
மாணவர்கள், மற்றும் தொழில் புரிவோருக்கான English Personal Class
தொடர்புகளுக்கு : 077 6169 470
(526)

**உடனடி வேலைவாய்ப்பு**
நங்கள் புதிய தொழில் தேடுநரா? முகாமைத்துவத்தில் சிறந்த வருமானம் பெற விரும்புபவரா? நீங்கள் O/L or A/L பயின்றவரா? உடன அழையுங்கள்.
We are looking For this Categories.
● Supervisor ● Assistant Manager
● Training Administrator ● Management Trainers
பயிற்சியின் போது 12000 - 25000 பின்பு 60,000 மேல் மற்றும் Bonus பெறலாம்.
முன் அனுபவம் அவசியமில்லை. தங்குமிடம் மருதுதுவம் மற்றும் பயிற்சி இலவசம்.
தொடர்பு : 077 4458 134
இல.225, 3-ம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(528)




### யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

அருள் ஒளி தர்சன மாலையும் வைகாசி மாத சிறப்புப் பூஜையும்
இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 24.05.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி
வரமருளிக் காத்தருள மனோன்மணி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலையும் வைகாசி மாத சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.
ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுயும்வண்ணம் வேண்டுகின்றோம்.
குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.
ஒவவொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது.
யாழ் தொடர்புகளுக்கு : 077 9825004 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192
(519)

**Dutch, Deutsch, French**



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.
* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
**Vivekananda Academy**
அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
221/1. மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
(Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393
(C-1011)

**CNR WORLD WIDE EXPRESS & TRAVELS** யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்
'அலுவலக திறப்பை முன்னிட்டு நீங்கள் அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது'.



வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் (AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)
**சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை**
401, Clock Tower Road, Jaffna. (மணிக்கூட்டு கோபுரம் அருகில்) அழையுங்கள்:077 293 1062
(C-1009)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.